# ஞானக்கதிர்

அன்பு-அறநெறி-ஆன்மீகம்

வைகாசி '89




இந்து சமய மாத மஞ்சரி

விலை ரூபா-5/=

# மில்க்வைற்

## சவர்க்காரத் தொழிலகம்

" திருக்கோயிலேத் தினமும் வழிபடுங்கள்,
திருமுறையைத் தினமும் ஓதுங்கள்,"

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளே அனுப்பி பஞ்சபுராணத்திரட்டு புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

"மில்க்வைற்"

525/2, காங்கேசன்துறை வீதி'
த.பெ.இல. 77
யாழ்ப்பாணம்.

**தரமான கலர்ப்படப்பிரதிகள்**

- அதிகுறைந்த கட்டணத்தில்
- மிகக் குறுகிய காலத்தில்

**கலர்ப்படச்சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்**

- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல் 3 முதல் 5 நாட்களில் விநியோகம்

**ஷப்ருவை** நாடுங்கள்

ஷப்ரு நிதி நிறுவனம்
207, மின்சாரநிலேய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலேபேசி எண். 22073



மே - 89

ஞானசித்தம்

ஞானம்: 1 சித்தம்: 2

# விசாக சங்கல்பம்

கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒரு திரு முகன் வந்தாங்கு உதித்தனன் உலக முய்ய - என்கிறது கந்தபுராணம்.

கந்தபுராணம் முருகன் புகழ் பாடும் அவன் சக்தியை எடுத்தோதும் பெரு நூல். கந்தபுராணத்துக் கதாநாயகனு கிய கார்த்திகேயனுக்கு உரிய விசேட தினங்களில் வைகாசி விசாகமும் ஒன்று கும். இது வைகாசி மாதம். வைகாசி யின் சிறப்புத் திவ்விய திருநாளாக விளங் குவது விசாகமே.

அதர்மம் தலையோங்க விடாது தடுத்து, தர்மத்தை நிலை நாட்டும் பொருட்டே முருகன் உதித்தான். உல கம் உய்யும் வண்ணம், சிவனின் பேர ருட் திறத்தினல் வந்து தோற்றியவன் ஆறுமுகன். அசுரத்தன்மை என்ற தீய வினை அகற்றி, நல்வினை அருளும் அருட் பேற்றினன் அவன். சண்முகனின் ஞானச் சுடர்கள் தீமைகளையும், புன்மைகளையும் பொசுக்கி பெரும் அருட் பேரொளி பரப்ப வல்லன. அதனுலேயே அவனைக் 'கூறும் அடியார்கள் வினைதீர்க்கும் கும ரன்' என்பர்.

முருகன் சிறப்பு - அவன் அதர் மத்தை ஒழித்த பண்பு - அதன் மகத் துவம் உணரப்படவேண்டிய காலம் இது.

மானிடம் மறந்து, தர்மத்தையும், நீதியையும் இருட்டறைக்குள் பூட்டி விட்டு, ஆணவம், அகம்பாவம், அசுரத் தனம், அந்தஸ்து, கர்வம், கயமை, கள் ளத்தனம் போலித்தனம் ஆகியவை மேலோங்கி அவையே இயல்பினவை ஆகிவிட்ட இந்தக் கலியுகத்தில் -

கலியுக வரதனும் கலியுகத்தின் கண் கண்ட தெய்வமாம் கந்தனின் பிறப்பின் தத்துவம் உணரப்பட்டாக வேண்டும்.

நல்வினையின் சிறப்புத் தெரியாமல், தீயவினைகளையே இயற்றி இருள் மண் டிக் கிடக்கும் இன்றைய மனித குலத் திடையே, ஞானஒளி ஏற்றுவதற்கு கந்த வேளின் பேரருட் திறனும் சக்தியும் உணரப்படுதலும் அவசியம்.

அபயக் கரம் காட்டி மக்களைக் காக் கும் அந்தச் சடாச்சரனின் சக்தியை உணர்வதே தெய்வீகம். மக்கள் இதயங் களில் உள்ளொளி பரவி, அவர்கள் தீயவழி செல்லாது நல்வழி நாட வைப் பதனையும் தெய்வீகம் எனலாம் அல் லவா?

ஆலயம் செல்வது. வழிபாடு செய் வது மட்டும் நல்வினை பயந்துவிடாது. உள்ளம் கசிந்து; உடல் நெக்குருகி, ஞானப்பிழம்பான முருகனைத் துதிப்ப தோடு, மனதை அவன் மயப்படுத்தி, நல்வினைகளை நாட வேண்டும். தீயவினை களை ஒதுக்கி விட வேண்டும்.

அதனையே முருகனின் சிறப்புத் திரு நாளான வைகாசி விசாகத்தில் மனதில் பதித்து செயலாக்கச் சங்கல்பம் செய் வோமாக. — செவ்வேள்

## போதையில் நீந்தும்

# பேதைகள்

பேட்டி அளித்தவர்:-

**மருத்துவக் கலாநிதி திருமதி. சுலோசனு யோகநாதன்**

1. கேள்வி: இன்றைய காலகட்டத்துப் பிரச்சினைகளுள் மிக அவசியமானதும், அவசரமானதுமானதுமான ஒரு பிரச்சினையாக 'போதை வஸ்துப் பாவனை' அமைந்துவிட்டது. மன நோய் வைத்தியர் என்ற முறையில் உங்களிடம் சில கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என வந்திருக்கின்றேன். போதைவஸ்துப் பாவனையாளர்கள் பலர், நோயாளிகளாக உங்கள் சிகிச்சைப் பிரிவுக்கு வந்திருப்பார்கள் என நினைக்கின்றேன். போதைவஸ்துப் பாவனையாளர்களுக்குரிய எவ்வகையான சிகிச்சைகளை இங்கு வழங்குகின்றீர்கள் என நாம் அறியலாமா?

பதில் : போதை வஸ்துப் பாவனையாளர்கள் பாவனையை நிறுத்துவதனுல் ..... வருகின்ற ( withdrawal symptoms ) நோய்கள், அதாவது அதன் பாவனையை நிற்பாட்டும் போது, ஏற்படும் விளைவுகளுக்கான, மாத்திரைகளைத்தான் நாம் இவர்களுக்கு கொடுக்கின்ருேம். அத்துடன் அவர்களது பாவனைக்கான காரணத்தை, அதாவது அவர்களது பாவனையின் வரலாற்றைக் ( history ) கேட்டு ...... டாக்டர் என்ற ரீதியில் மட்டுமல்லாமல் அவர்களது குடும்பத்தவருள் ஒருவராகி, அவரவர்க்கு ஏற்ற, அறிவுரைகளை வழங்கி வருகின்ருேம்.

2. கேள்வி : அவர்களுக்கு நீங்கள் கூறுகின்ற பொதுவான அறிவுரைகள் என்ன ?

பதில் : அவர்களது சூழலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்படி கூறுவோம். அதாவது பொதுவாக இளைஞர்கள்தான் இந்தப் பாவனையில் மிகவும் மோசமாக ஈடுபடுகின்ருர்கள். எனவே அவர்களது நண்பர்களை, அவர்கள் சந்திக்கின்ற இடங்களை மாற்றும்படி முக்கியமாகக் கூறுவோம். காரணம் இங்கு நோயாளியாக வந்து, பாவனையில் இருந்து மீண்டு ...... இனிப் பாவிப்பதில்லை என்ற மன உறுதியுடன் வெளியேறியவர்களே ...... மீண்டும் தம் நண்பர்களைச் சந்திக்கும் போது வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதைதான். மீண்டும் எத்தனையோ நோயாளிகள் இப்படி வருவார்கள். மீண்டும் மீண்டும் ...... அதே மன உறுதியுடன் வெளியேறுவார்கள். நோயாளிகள் தந்த அனுபவத்தினுல் தான் ...... இந்த அறிவுரையை வழங்குவோம். தொடர்ந்தும் பாவிப்பதால் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவுகளை வலியுறுத்துவோம். வாழ்க்கையில் அவர்களுக்கு உரிய பொறுப்புக்களை எடுத்துச் சொல்லி நல்வழிப்படுத்துவோம்.

3. உங்கள் சிகிச்சைப் பிரிவுக்கு, போதை வஸ்துப் பாவனைக்கு அடிமையான, எப்பேற்பட்ட நோயாளிகள் வருவார்கள்?

பதில் 1. ஆரம்பநிலையாளர்கள்.

2. போதைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில், பாவனை நிறுத்தத்தால் வந்த விளைவுகளுக்குச் சிகிச்சை பெற விரும்பும் நோயாளிகள்.

3 பாவனையால் சீர் குலைந்து, பல இன்னல்களுக்கு ஆளாகி பாவனையை நிறுத்த வேண்டும் என உதவிகோரிவரும் நோயாளிகள்.

4. கேள்வி: ஆரம்ப நிலையாளர்கள் என நீங்கள் குறிப்பிடும் நோயாளிகள் எப்படி இருப்பார்கள்?

பதில்; அதாவது இளைஞர்கள், அதிகமாக மாணவர்கள் தான், இந்த நிலையில் இருப்பார்கள். நண்பர்களும் சேர்ந்து இப் பழக்கத்துக்கு அடிமையாகின்ருர்கள். அதுவும் பெரும்பாலும் நல்ல பணக்கார அந்தஸ்துள்ள பிள்ளைகள், ஒரேயொரு பிள்ளையென கட்டுப்பாடற்று வளர்க்கப்படுகின்ற பிள்ளைகள் தான்...

இந்த நிலையில் பெற்றோரால் கண்டுபிடிக்கப் பட்டு, நோயாளிகளாக வருகின்றனர். எத்தனையோ புதிதாக மணம் முடித்த இளம்மனைவிமாரும், தம் கணவர்கள் இந்தப் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர்.... என்பதை, அறிந்து ஆரம்பநிலையிலேயே கூட்டிவந்து சிகிச்சை பெறுவர்.

5. கேள்வி: போதைப் பொருட்கள் கிடைக்காத பட்சத்தில் ... சிலர் உங்களிடம் சிகிச்சைக்கு வருவதாகக் கூறினீர்களே? கிடைக்காத பட்சத்தில் என நீங்கள் குறிப்பிடுவது எதனை?

பதில்: போதைப் பொருட்கள் வழக்கமாகக் கிடைக்கும் இடங்களில் கிடைக்காத போது, அதாவது விற்பனை தடை செய்யப் பட்டபோது, அத்துடன் வெளிநாட்டில் போதைவஸ்துக்களைச் சுதந்திரமாகப் பாவித்துப் பழகிய ஒருவர் தன் குடும்பத்திடம் வருகின்றார் என வைத்துக் கொள்வோம். இங்கு பாவனைக்கு சுதந்திரம் இல்லை. அத்துடன் இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாது. மற்றது பணம் பற்றுக்குறை. அதாவது வெளிநாட்டைப் போல் இங்கு இதற்குச் செலவழிக்கப் பணம் போதாது. மற்றது குடும்பப் பிணைப்பில் ஒரு விரிசல் இந்தப் பாவனையினால் வந்துவிடுமோ என்ற மனத் தயக்கம்.

6. கேள்வி: அப்படியானால்... இங்கும் போதைவஸ்து விற்பனை தாராளமாக நடைபெறுகின்றது என்று சொல்கின்றீர்கள்...

பதில்: ஆம். தற்சமயம் விற்பனை அதிகரித்திருக்கின்றது என்றுதான் சொல்வேன். 2, 3 மாதங்களுக்கு முன்னர், (ஒரு வேளை போதைவஸ்து விற்பனை தடைசெய்யப்பட்டு, இங்கு கிடைக்காமல் இருந்திருக்கலாம்) இங்கு வரும் நோயாளிகள், அதிகமாக பாவனை நிறுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளுக்குச் சிகிச்சை பெற வருபவர்களாக இருந்தது. இப்போது இத்தகையநோயாளிகள் குறைவாக இருப்பதைக்கொண்டு, விற்பனை தாராளமாக நடைபெறுவதாக ஊகிக்கின்றேன்.

7. கேள்வி: உங்கள் சிகிச்சைப் பிரிவுக்கு, இந்த drug addiction பல இன்னல்களுக்கு ஆளாகி, பவனையை நிறுத்தவேண்டும் என உதவி கோரி நோயாளிகள் வருவதாகக் கூறினீர்களே... இவர்கள் நிலை எப்படியாக இருக்கும்? அதாவது அவர்கள் மனமாற்றத்துக்குரிய காரணம் என்னவாக இருக்கும்?

பதில்: இதனால் சிலர் தம் வீடு, காணி, நகை அனைத்தையுமே இழந்து, இனி இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையில் கடனாளியாகி, குடும்பமே சீர்குலைந்து நிர்க்கதியாகி நிற்க்கும்போது, உளவியல் ரீதியாக அவர்கள் கவலைப்படுகின்றார்கள்- அனாதையாக, நிர்க் தியாக நிற்கும் தமக்கு ஆதரவு தேடுகின்றார்கள். இதனால் பாரிய மனமாற்றம் ஏற்பட்டு தங்கள் தவறுகளைச் சொல்லி, அதற்குப் பரிகாரம் தேடும் நிலையில் வருகின்றார்கள்.



8. கேள்வி: இதற்கு சிகிச்சை அளிப்பதன் மூலம், பாவனையிலிருந்து முற்றாக விடுபடமுடியுமா?

பதில்: ஆம் முற்றாக விடுபடக்கூடிய சிகிச்சை முறைகளும் இருக்கின்றன. ஆனாலும் முற்றாக விடுபடுவது பாவனைக்கு அடிமையான நோயாளியின் மனக்கட்டுப்பாட்டைப் பொறுத்ததே.

பேட்டி கண்டவர்:- **இருபாலை ஸ்ரீகுமாரி**

9. கேள்வி: Pain killers என்று சொல்லப்படுகின்ற Morphia, Pethidine, போன்றவை நோயாளிகளுக்கு வழங்கப்படுவதனால் தீமை இல்லையா? அதாவது ஒரு இருதயநோயாளிக்கோ, புற்றுநோயாளிக்கோ, அந்த நோயாளி, பயம்... படபடப்பு... வலி என்பவற்றால் வருந்தாமல் இருக்கப் பாவிக்கப்படுவதால், அந்த நோயாளிக்கு மீண்டும் வலி, மாரடைப்பு என்பன வரும்போது, இந்த மருந்தினைப் பாவிக்க வேண்டுமென மனம் தூண்டாதா?

(31 ஆம் பக்கம் பார்க்க)

ஒரு தவமுனிவர் மானியம்பதி மருதடி விநாயகர் தற்போது திருக்கோயில் கொண்டிருக்கும் கற்பக்கிரகமண்டபத்தை ஸ்தானமாகக் கொண்டு நிஷ்டையில் இருந்தார் என்று அறிகிறோம்.

தமிழரசர் காலத்தில் இவ்விடத்தில் விநாயகர் ஆலயம் இருந்ததென்றும் அந்தக்காலத்திலே மகான் இங்கே நிஷ்டையில் இருந்தார் என்றும் பின் பறங்கியர் காலத்தில் ஆலயம் இடிபட்டதென்றும் கூறுவாரும் உளர் இதற்கு ஆதாரமாக ஆலயத்தின் தெற்கு வீதியில் உள்ள திருக்குளத்தை பிள்ளையார் குளம் என்று சனங்கள் அழைத்து வந்தார்கள் என்று சொல்வார்கள்.

நடந்து வரும் வைரவ மடையும், வேள்வியும் கிட்டி வந்தன. பெரியவர் இக்கோவிலிற் பெருந்தொகை ஆடுகள் வெட்டப்படுமென்று கேள்விப்பட்டார். "ஐயோ என்ன பரிதாபமான காட்சி! கடவுள் கொடுத்த தனுகரணுதிகளை அழித்துக் கடவுளைத் திருப்தி செய்வதா? கொலைத் தொழில் புரிவார் ஆட்டை வெட்டும் பொழுது அவ்வுடம்பை உடைய ஆன்மாவின் கதியென்னே!

கொலைஞனும் மரணந்தத்தில் அம் மிருகப் பிறவியை பெற்று அது அனுபவித்த துன்பத்தை அனுபவிப்பானல்லவா? இக்கோவிலதிகாரியும் பூசகரும் வழிபடுவோர்களும் கொலை புரிபவரும் எச்சமயத்தவர்களோ? எக் கதியையடைய விரும்புகின்றார்களோ? அறிகி

# மருதடியான் மாண்பு

போர்த்துக்கேயர் காலத்தில் மருதடியில் இருந்த விநாயகர் ஆலயம் இடிக்கப்பட்டு சவக்காலை ஆக்கப்பட்டது. மகான் சமாதியடைந்த இப்பொழுது மூலஸ்தானத்திற்கு கிழக்குப் பக்கத்தில் உள்ள மருதமரத்தின் கீழ் இரவு நேரங்களிலும், பறங்கியர் கண்களுக்கு புலப்படாத நேரங்களிலும் பொங்கலிட்டு கற்பூரம் எரித்து இந்துக்கள் விநாயகரை வழிபட்டு வந்தார்கள்.

அது ஒல்லாந்தர் காலம். பிரமசரிய ஒழுக்கம்பூண்ட தியாகராசக்குருக்கள் என்பவர் தனிமையாய் நவாலி, வயல்களிலிருக்கும் தூக்கிணி வைரவர்கோவிலடியில் வந்து தங்கினர்.

## சுவாமிநாதன் தர்மசீலன்

இத் தூக்கிணி வைரவர் கோவிலிலிருந்து ஒரு வருஷம் வரையிற் சிவபூசை வணக்கஞ் செய்து வரும் நாட்களில் வருடந்தோறும்

லேம். என்று தமக்குள்ளே பிரலாபித்துப் பெரியவர் அவ்விடம் விட்டு நீங்கிக் கீழ்த் திசை நோக்கிச் சென்று மானிநகரிலுள்ள மருதஞ்சோலையை அடைந்தார். இச் சோலைக்கு அணித்தாயுள்ள காணிகள் மாணியம்பதி சுவாமிநாத முதலியாருக்குரியது. மருதமரங்கள் நின்ற நிலமும் பக்கத்திலுள்ள குளமும்" "முக்கோணத்திடரும் பிள்ளையார் குளமும்" எனப் பெயர் வழங்கலாயிற்று.

இந்நிலத்திலே இரண்டு பனைகளும் ஓர் வேப்பமரமும் நிற்க அவைகளை வெட்டி ஒரு சிறுவீடுகட்டிச்சீவித்திருந்தார் இப்படி இருந்து வரும் நாட்களில் இவ்விடத்தில் அநேக சனங்கள் பொங்கல வணக்கஞ் செய்து வந்தார்கள். அங்ஙனம் அவர்கள் செய்து வரும் உற்சாகத்தைக்கண்டு அன்பர்கள் உய்யுமாறு ஒரு விநாயகர் சிலையை வைத்துப் பூசாக்கிரமங்கள் செய்து வந்தார், செய்து வரும் நாட்களில் ஒல்லாந்தர் பறங்கியரைப் போல் மத



ஸ்தாபனஞ் செய்யாது குடிகளாயுள்ளவர்கள் வலிந்து போய்ச் சேர்ந்து கிறிஸ்தவர்கள் ஆகும்படி (அற்ப குற்றம் செய்தவர்களையும்) கொலைத் தண்டங் கற்பித்தல், கிறீஸ்தவ பாடசாலைகள் வைத்தல், கிறிஸ்தவர்களுக்கு பட்டமளித்தல் உயர்ந்த உத்தியோசம் கொடுத்தல், ஆதிய கிரியைகளினுல் அனேகரைத்தம்மதப் படுத்தினர். எம்.சுவாமிநாத முதலியபரும் மார்க்கவிஷயத்தில் ஒல்லாந்தரோடு இணங்கி நடந்தனர் போலும்

செட்டியார் வழங்கிய திருவுருவம் மகா மண்டபத்தில் வைக்கப்பட்டுக் காவடிப்பாலா பிஷேகம் பண்ணப்பட்டு வருகின்றது.

இது நிற்கத் தியாகராாசர் மருத மரத்தின் கீழ்த் திசையில் விநாயகர் சிலையை வைத்துப் பூசை செய்து வரும் நாட்களில் திருக்கோயில் கட்டி மகோற்சவம் நடாத்த உத்தேசித்தார் உத்தேசித்து விநாயகர் அருளை முன்னிட்டுச் சுவாமிநாத முதலியார் உதவியைக்கொண்டு மருதமரத்தின் மேற்குத்திசையை நோக்கிக் கெர்ப்பக்கிரகமும், அர்த்த மண்டபமும் கட்டி முடித்து எஞ்சிய கோவிற் பாகங்களை மரந்தடிகளால் உருவாக்கிப் பங்குனி மாசத்தில் மகோற்சவ ஆரம்பஞ் செய்வித்து, இருபத்துநான்கு நாட்களாய் விஷேச விழாக் கொண்டாடி, சித்திரைமாதம் முதலாந்தேதியில் புதுவருஷம் ஆரம்பமாகும் வேளையில் இரதோற்சவமும், அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடாத்தி வந்தார். கோவில் மேற்குத்திசையாக மாற்றவேண்டியிருந்தது. கீழ்த் திசையில் இருந்தால் உற்சவம் நடாத்தப் போதிய இடம் இல்லாதிருந்ததும் வீரகத்தி விநாயகரை அமர்த்திக் கும்பாபிஷேகஞ் செய்யவேண்டியிருந்துமே போதிய நியாயங்களாகும். ஆலயம் உற்பத்தியான காலங்களில் ஒல்லாந்தவரசு முடிந்து ஆங்கிலேயர்காலம் உதயமாகிவிட்டது.

ஏர்கொண்ட மானிநகர்க் கிறைவனு
மேரம்பனெழிலார்சீதச்
சீர்கொண்ட மருதடியிற் செங்கழுநீர்ப்
போதகமாம்புனிதனேறிக்
கார்கொண்ட பிள்ளையான் தடாகமார்
காவலர் சூழ் செம்மைவீதிப்
போர்கொண்ட திருவுலாத் தேரூரும்
பெருமைசேர் கோலமன்னு.

# திருமுறை பாடக்கேட்டு திளைத்த யோகர்

1910 ஆண்டில் தமது குருவாகிய செல்லப்பாச் சுவாமிகளிடம் ஆசிபெற்றுக்கொண்டு துறவியாகிச் சுவாமி கதிர்காமத்திற்கு நடந்து சென்றார். திருகோணமலை வழியாகவே சென்றார். மட்டக்களப்பில் சுவாமிகளோடு ஒரு மந்திரவாதியும் சேர்ந்து சென்றார். கிழக்கு மாகாணத்தில் மிகஉயர்ந்த மரங்கள் அடர்ந்து செறிந்த காடுகளையுடைய பொத்துவில் என்னும் இடத்தைக் கடந்து போகும்போது மதங்கொண்ட காட்டெருமைகள் இவர்களை நோக்கித் தாக்குவதற்காக வந்தன. தன்னைப் பெரிய மந்திரவாதியாகச் சொல்லிக் கொண்டே மந்திரங்களைச் செபித்துப் பார்த்தார். அம்மந்திரங்கள் பலிக்கவில்லை அவர் பயந்து ஓடிச் சென்று ஒருமரத்தில் ஏறிக் கால்களை முடக்கிக்கொண்டு படுத்துவிட்டார்.

சுவாமிகளோ அசையாது நின்று தன்னைத் தாக்கவந்த எருமையை ஒரே பார்வையாகப் பார்த்தார். எருமை அவரது பார்வைக்கு எதிர்நிற்க முடியாமல் திரும்பி ஓடிற்று. மற்ற எருமைகளும் ஓடின. இவ்வாறு எருமைகள் ஓடியபின் சுவாமிகள், மரத்திலேறிப் பயத்துடன் முடங்கியிருந்த மந்திரவாதியைப் பார்த்துச் சிரித்தார். மந்திரவாதியும் மரத்தைவிட்டு இறங்கி வந்து பயபக்தியோடு சுவாமியைத் தழுவி 'தரத்தினில் பெரியவரே' என்று சொல்லிப் பாராட்டினார்.

வழிநடந்த களையும், வெயில் வெப்பமும், பசியும், தாகமும் அதிகரிக்கப் பெற்றன. களை மிகுதியால் சுவாமிகள் ஓரிடத்தில் அமர்ந்தார். அப்போது அவரைக் கண்ட தாழ்ந்த சாதி மக்கள் சிலர் அவரிடம் வந்தனர். அவர்களிடம் சுவாமிகள் தாகத்திற்குத் தண்ணீர் தரும்படி கேட்டார். அவர்கள் 'நாங்கள் தரும் தண்ணீர் நீங்கள் குடிப்பதற்கு ஆகாதையா. நாங்கள் தாழ்ந்தசாதி மக்கள். நாங்கள் தருதலும் பாவம்' என்று கூறினர். சுவாமிகள் அவர்களைப் பரிகசித்துவிட்டு அவர்களிடமிருந்து நீரை வாங்கிப் பருகினார். அவர்களுக்கு அளவுக்கு அடங்காத மகிழ்ச்சி உண்டாயிற்று.

நாகலிங்கப் பரதேசியார் என்று ஒரு பக்தர் இருந்தார். அவர் சங்கானையைச் சேர்ந்தவர். திருமுறை பாடும் பணியையே சிவப் பணியாகக் கொண்டவர். அவர் திருமுறைப் பித்தர்.

அவர் திருவாசகம் பாடினால் கல்லும் கனிந்து உருகும்; வாழ்நாள் முழுதும் ஊனும், உயிரும் நைந்து உருகப் பாடிப்பாடி உடல் இளைப்புற்று முதுமை வந்தெய்தியது அவருக்கு. இந்த நிலையிலே எங்கள் யோக சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்ட பரதேசியாருக்குச் சுவாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. ஒருநாள் சில அன்பர்களோடு பரதேசியார்சுவாமிகளுடைய ஞானக் கொட்டிலுக்கு வந்து சேர்ந்தார். பரதேசியாரைக் கண்டதும் சுவாமிகள் இருக்கைவிட்டெழுந்து மகிழ்ச்சிக் கூத்தாடினார். தனது ஆசனத்தில் பரதேசியாரை அமருமாறு அன்பு ததும்பப் பணித்தார். பரதேசியார் மறுத்தார். இந்த மகான் இருந்த ஆசனத்தில் யானோ இருப்பது என்று நடுநடுங்கினார் பரதேசியார். சுவாமிகள் இருக்குமாறு பணிப்பதும் பரதேசியார் மறுப்பதுமாகிய பணிவன்பின் ஆடல் சில நிமிஷங்கள் நடந்தது. இறுதியில் சுவாமிகளின் கட்டளையை மறுக்க முடியாமல் பரதேசியார் ஆசனத்தில் அமர்ந்தார் வந்த அன்பர்களும் தாழ இருந்தனர் உடனே 'இடரினும் தளரினும்' என்று தொடங்கும் சம்பந்தப் பெருமானுடைய தேவாரத்தை ஓதுமாறு பரதேசியாரைப் பணித்தார் சுவாமிகள். இந்தத் தேவாரத்தை ஓதிக்கொண்டிருக்கும்போது ஒரு அன்பனும், மனைவியும் சுவாமிகளுக்கு ப தகாணிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு ஒரு தாம்பாளம் நிறைய நிவேதனப் பொருள்களோடு கொட்டிலை வந்து அடைந்தனர். இவர்களைக் கண்டதும், சுவாமிகள்

பரதேசியாரை நோக்கிப் பின்வருமாறு கூற லுற்ருர். 'நீர் இடரினும் தளரினும் பாடுவ தைக் கேட்ட அம்மையும், அப்பனும் கயிலை யில் இருந்து உமக்குப் பண சுமந்த பாடற் பரிசு அளிக்கவே வந்திருக்கிருர்கள்' என்ருர்' வந்த அன்பரும் மனைவியும் சுவாமிகளுடைய பாதங்களில் தாம்பாளத்தை வைத்து வணங் கினர். தாம்பாளத்திலே பழம், சூடம், ஊது பத்தி முதலிய பொருள்களோடு ஒரு பட்டுப் பையும் இருந்தது.



சுவாமிகள் பட்டுப்பையை எடுத்து அதன் முடிச்சை அவிழ்த்தார்கள். கலீர் என்ற ஒலி யோடு 100 தங்கப் பவுண்கள் பரதேசியாருக்கு முன்னே விழுந்தன. யாவரும் வியப்பு எய்தி னர். அற்புதம்! அற்புதம்!! என்றனர் 'இட ரினும் தளரினும்' பாடிச் சம்பந்தர் பொற் கிழி பெற்ருர். 'இடரினும் தளரினும்' பாடிய பரதேசியாருக்கும் பொற்கிழி கிடைத் தது என்று சுவாமிகள் ஆனந்தம் பொங்கச் சிரித்தார்கள். முடிவிலே அந்தப் பவுண்களிலே ஒன்றை எடுத்துப் பரதேசியாரை அங்கே கொண்டுவந்த மோட்டார் வண்டியின் சார திக்குச் சுவாமிகள் கொடுத்தார்கள். மிகுதி யான 99 பவுண்களையும் பரதேசியாரின் கையில் வைத்துப் பின்வருமாறு அன்புக் கட்டளையிட் டார்.

'நீர் இத்தனை காலமும் பாடும் பணியில் ஈடுபட்டு உம்முடைய உடல் இளைத்துப்போய் விட்டது. உம்முடைய பாடும் பணிக்குப் பரி சும் இதோ ஆண்டவன் அனுப்பி வைத்திருக் கிருன். ஆகவே இனி நீர் ஆறுதலாக இருக்க வேண்டும். உசன் ஆச்சிரமத்திலேயே தங்கிக் கொள்ளும் என்று பணித்தார்.

## எஸ். கே. யோகநாதன்

இந்தக் கட்டளையைச் சிரமேல் தாங்கிய வராய் உசன் ஆச்சிரமத்திற்கே சென்று பர தேசியார் தமது கடைசி நாட்களைச் சிவத்தி யான மயமாக்கி நிறைவு எய்தினர். சுவாமி களுடைய திவ்விய வரலாற்றில் இந்த நிகழ்ச்சி மிகவும் உச்சமான பெருமை உடையது.

திருமுறைகள் அருள்மயமானவை, ஞான மானவை, மந்திரமயமானவை என்ற மாபெரும் உண்மைக்கு அழியா அருள் முத் திரையிட்டு உலகிற்குப் பொய்படாச் சான்று பகர்வதற்கு எங்கள் சுவாமிகளை ஒரு புண்ணிய கருவியாகத் திருவருள் பயன்படுத்தியதே என் பதை நினைக்கும்போது எங்கள் சுவாமிகள் ஒரு ஒரு மாபெரும் அருளாளன் என்ற உண்மை யினை நாம் அறியலாம். முக்காலமும் உணர்ந்த தத்துவஞானி யோகர் சுவாமிகளின் நாமம் என்றும் வாழ்வதாக!

★

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை
முழு மணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனுலே.

சம்பந்தர்



சைவமும் தமிழும் சிறக்கவேண்டித் தாங்கள் '' ஞானக்கதிர் '' எனும் இந்துசமய சஞ்சிகையை, வெளியிடுவது அறிந்து பெருமகிழ்வுடன் வரவேற்கின்றோம். இந்துசமயதத்துவ உண்மைகளை உலகுக்கு எடுத்துக்காட்டத் தங்களுடைய முயற்சி பெரிதும் துணைநிற்கும்.

வாழ்க 'ஞானச்சுடர்'
வளர்க அதன் பணி.

நீர்வேலி **கு. தியாகராசசர்மா**

அன்புடையீர்!

காலமும் தேவையும் அறிந்து ''ஞானக்கதிர்'' வெளிவந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. பெரியோரின் ஆசிகள் மேலும் ஞானக்கதிரை ஒளிவீசச் செய்யும் என நம்புகிறேன்.

இலங்கையில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சமய சஞ்சிகை இல்லாத குறையை ''ஞானக்கதிர்'' தீர்த்து வைக்கும் என எண்ணுகிறேன். இளம் சந்ததியினருக்கு இச் சஞ்சிகை பெரும் வழிகாட்டியாக அமைய வேண்டும்.

வெள்ளிக்கிழமை என்ற கதை புதுமையாக அமைந்தது நன்று.

கும்பமேளாக் கட்டுரை பலரும் அறியும்படி அமைந்துள்ளது. இவ்வாறு பல நல்ல அம்சங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

'ஞானக்கதிர்' நிலைபெற்று ஒளிவீச எல்லாம்வல்ல விநாயகனைப் பிரார்த்திக்கிறேன்.

அரகேசரிப்பிள்ளையார் கோவில்
நீர்வேலி சா சோமதேவசர்மா

''ஞானக்கதிர்'' கண்டு மகிழ்ந்தேன்.

எமது சிற்றறிவால் புரிந்துகொள்ள முடியாத சமய நெறிகளை கட்டுரைகள், கதைகள் வாயிலாக தருபவை 'ஞானக்கதிர்'' போன்ற சஞ்சிகைகளே. தேவாரத்தையும், புராணத்தையும் அப்படியே தராது அவற்றை சமூக, விஞ்ஞான அமைப்புக்கேற்ப அழகாக வெளியிட்டு புரியவைத்தல் சிறப்பாகும்.

''தாயினும் நல்ல தலைவன்'' ''பக்தியின் வலிமை'' ''வெள்ளிக்கிழமை விரதம்'' என்பன அந்த வரிசையில் மிகமிக சிறப்பானவை. இப்பாணியில் அமைவதே படிப்பவர் மனதில் பதியச் செய்யும் வழியாகும்.

'வெள்ளிக்கிழமை விரதம்' சிறுகதை மிக மிக நன்றாக இருந்தது. மனதைத் தொட்டது. நிச்சயமாக பலமனங்களை தெளியவைத்திருக்கும், திருந்த வைத்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

12, கி. வி. திட்டம், திருநெல்வேலி,
கோப்பாய் **ந. சதாசிவஐயர்**

யாழ்ப்பாணத்தில் இருந்து சமயசஞ்சிகை ஒன்று வெளிவர வேண்டியதன் அவசியத்தினை உணர்ந்து தற்போது ஞானக்கதிர் இந்து சமயமாத மஞ்சரியை வெளியிட்டமை இந்துக்களுக்கு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

வெள்ளிக்கிழமை விரதம் சிறப்புச் சிறுகதை ஓர் உண்மைச் சம்பவமாக இருக்கும். மேற்படி சிறுகதையை வாசித்து மேலும் பலர் தம்மை திருத்திக் கொள்ளவும் விரதம் பற்றியும் வெள்ளிக் கிழமையின் புனிதம் பற்றியும் அறியவும் உதவும் என எதிர்பார்க்கலாம். சத் சங்கம் என்ற தலைப்பில் வெளியான விடயமும் நல்லனவாக இருந்தன.

வெளி நாட்டில் இருந்து வெளிவரும் சமயசஞ்சிகையோடு போட்டி போடக்கூடிய விதத்தில் தரமான விடயங்களை பிரசுரிக்கும் ஞனக்கதிர் பல்லாண்டு காலம் வெளிவந்து சேவையாற்ற எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

சரசாலை இந்து இளைஞர் மன்றம்
க. சிவசங்கரநாதன்.
செயலாளர்

# கும்பாபிஷேகம்

## ஒரு விளக்கம்

எங்கும் வியாபித்துள்ள கடவுளின் அருட் சக்தியைப் பெற ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இறைவனுடைய தெய்வீக சக்தி எங்கும் நிறைந்திருக்கிறது. பூரணப் பொருளாய் அச்சக்தி எங்கும் நிறைந்திருப்பினும் இலகுவில் அதை எல்லோராலும் பெற்றுக்கொள்ள முடியவதில்லை.

அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்திருக்கும் தெய்வீக சக்தி ஆலயத்தில் சேகரிக்கப்பட்டு பக்தர்களுக்கு பயன்படுகிறது.



**யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா**

ஆலயம் சிற்பாசாரியரின் திட்டப்படி அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது. கும்பாபிஷேகத்தின் போது யாகசாலையில் செய்யும் வேத மந்திரங்களின் மூலம், ஆலயத்திற்குரிய சக்தியைப் பெறுகிறோம். யாகங்கள் கும்பாபிஷேகங்கள் மூலம் மூர்த்தியில் தெய்வீகசக்தி நிரப்பி வைக்கப்படுகிறது.

யாகசாலையில் நீர் நிரம்பிய கலசங்கள் இருக்கும் கலசங்களில் அந்தணர்களின் வாக்கு சக்தியை நிரப்புகிறது. கலசத்தில் இருக்கும் சலத்திற்கு ஜெபத்தினது. ஒலி அலைகளை விரைவில் ஈர்க்கும் தன்மை உண்டு. வெள்ளி, தங்கம் தாமிரம் என்பவற்றினுலான கலசங்களுக்குள் இருக்கும் தண்ணீருக்கு இச்சக்தியைப் பெறும் வாய்ப்பு மிகவும் அதிகம். இந்த உண்மையை அறிந்தே ஆசாரியர்கள் யாகசாலையில் தாமிரகலசங்களில் நீர் வைத்து ஜெபம் செய்கின்றனர். அத்துடன் கலசங்களை சுற்றிலும் தானியங்களை முளைக்கச் செய்து பசுமையை மேலும் கலசத்திற்கு ஊட்டி வேதமந்திரங்களை ஓதுகின்றனர். யாகசாலையில் தேங்கும் ஒலிச்சக்தியை தங்கம் அல்லது வெள்ளிக் கம்பிகள் மூலம் கல்லாயிருந்த மூர்த்திக்கு அனுப்புகின்றனர். கும்பாபிஷேகத்தின் போது உருவேற்படுகின்ற தெய்வீக சக்தியினாலே சிற்பியினால் செய்யப்பட்ட வெறும் சொரூபம் வேதமந்திர சக்தியைப் பெற்று பூரணப் பொருளாக அருள் கொடுக்கும் மூர்த்தியாக அமைகிறது.

தங்கம் அல்லது வெள்ளியில் செய்த யந்திரத் தகடுகளிலும் இச்சக்தியைப் பாய்ச்சி மூர்த்திகளுக்கு அடியில்வைக்கின்றனர். அருள் நிறைந்த மூர்த்தியிடமிருந்து அடியார்கள் அருளைப் பெறுகின்றனர்.

★

# சஷ்டி விரதம்

நல்லூர் கந்தசாமி கோயிலின் உள் வீதியைச் சுற்றவர சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆண்கள், தாய்க்குலம், இளம்பெண்கள், குழந்தைகள் எல்லோரும் பாய் விரித்தும் வெறும் தரையிலும் உயர்வு தாழ்வு இன்றி அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் அப்படி இருந்தது திருவிழா பார்ப்பதற்காக அல்ல. வீடு, வாசல், ஆடு மாடு, சொத்து சுகம் யாவற்றையும் ஒரு கண நேரத்தில் உதறி எறிந்துவிட்டு உயிரைக் காப்பாற்ற முருகன் காலடியில் தஞ்சமென வந்திருக்கிறார்கள்.

காவிக்கமலக் கழலுடன் சேர்ந்து அடியார்களைக் காத்தருளும் தூவிக் குலமயில் வாகனனே கதியென, மனம் தள்ளாடி, வாடித் தவிக்க, அறனே துணையென வந்திருக்கிறார்கள்.

நாலா பக்கமும் குண்டு வெடிக்கும் ஒலிகளும், துவக்குச் சூட்டின் ஒலிகளையும் கோயிலுக்கு மேலே ஷெல் பறந்து போகும் பயங்கர சத்தங்களையும் பொருட்படுத்தாது முருகன் ஆலயத்தில் ஒன்றும் நிகழாது என்ற அசையாத நம்பிக்கையில் அவர்கள் அங்கு இருக்கிறார்கள்.

இரண்டு நாட்களில் எல்லாம் முடிந்துவிடும், வீடு திரும்பலாம், என்று எண்ணி வந்தவர்கள் இரண்டு கிழமைகளாக அங்கு இருக்கிறார்கள்.

உள் வீதியில் இடம்பிடித்து இருந்தவர்கள் எழும்பி நடமாடவோ, வெளியில் செல்லவோ தயங்கினார்கள். எழும்பினால் இடம் போய்விடும், வேறுயாராவது வந்து இருந்து விடுவார்கள் என்ற பயமே காரணம்.

இப்படியான சூழ்நிலையில் கூட அருகில் இருந்தவர்களைப் பழக்கம்பிடித்து செய்திகள் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

ஜானகி மட்டும் இதற்கு விதிவிலக்காய் யாருடனும் பேசாது மௌனமாக இருந்தாள். ஏதோ மௌன விரதம் அனுஷ்டிப்பவள் போல் தோன்றினாள்.

வீட்டிற்கு மேலால் ஷெல் வந்து முற்றத்திலும் கோழிக்கூட்டின் மேலும் விழுந்தவுடன் தன் ஒரே மகள் குமுதாவையும், வயதான தாயாரையும் நல்லூருக்குக் கூட்டிச் செல்ல ஆயத்தம் பண்ணினாள். எவ்வளவு வாதாடியும், மன்றாடியும் தாய் வீட்டைவிட்டு வர மறுத்துவிட்டாள். செய்வதறியாது திகைத்து நின்றபோது வேறு வழியின்றி மகளை அழைத்துக் கொண்டு நல்லூர் புறப்பட்டாள்.

இங்கு வந்ததும் அவள் எண்ணம்யாவும் தன் தாயாரைப் பற்றியதாகவே இருந்தது. கருங்கடலில் காற்றடிக்கும் கப்பல் போல அவள் மனம் சிக்கித்தவித்தது. உயிருடன் இருக்கிறாவோ, ஷெல் விழுந்திருக்குமோ என்று மனம் பதறித்தவித்தது.

''முருகா உன்னையே நம்பினேன். என் அம்மாவைக் காப்பாற்று'' என்று மனமுருகி வேண்டினாள். வீட்டிலிருந்து வரும்போது கொண்டுவந்த கந்தரலங்காரப் புத்தகத்தை எடுத்தாள். முருகனை எண்ணி, மனதில் தியானித்து திருப்பி, திருப்பி அதையே படித்தாள். ''ஆலம் குடித்த பெருமான். குமரன் அறுமுகவன் வேலும் திருக்கையும் உண்டே எனக்கொரு மெய்த்துணையே'' என்ற வரிகளை மட்டும் அவள் உதடு தொடர்ந்து உச்சரித்தது.

அப்பொழுது கோயிலில் புதிய செய்தியொன்று வந்தது. பலரும் அதுபற்றியே பேசத் தொடங்கினர். அதை அறிந்த குமுதா தாயிடம் வந்தாள். ''அம்மா வீடெல்லாம் கள்ளர் கொள்ளையடிக்கினமாம்'' என்றாள்.

அதிர்ந்து போனாள் ஜானகி.

இப்படியான ஒரு நிகழ்வை அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

குமுதாவின் கல்யாணத்திற்காகச் செய்த நகைகள் யாவும் வீட்டிலல்லவா வைத்துவிட்டு வந்துவிட்டாள். நாலா பக்கமும் ஷெல்

விழுந்தபோது கதிகலங்கி உள்ளமும் உடலும் செயலற்றுத் தட்டுத் தடுமாறி உயிரைக் காப்பாற்றினுல் போதும் என்று ஓடி வந்து விட்டாள். ஏற்கனவே குமுதாவுக்குச் சேர்த்த பணம் யாவும் நிதிக்கம்பெனியில் போட்டு வட்டியும் இன்றி முதலும் இன்றி எல்லாம் இழந்த வேளையில் நகைகளுக்கும் இந்தக் கதியா என்று எண்ணிய போது அவள் கண்கள் நீரைச் சொரிந்தன ''முருகா என்ன சோதனையப்பா'' என்று அவள் மனம் குமுறியது.



அன்று கந்தசஷ்டி ஆரம்பம் என்பது நினைவுக்கு வந்தது. கந்தசஷ்டிப் புத்தகத்தை எடுத்து அதில் தன்னை ஐக்கியப்படுத்தினுள்.

அப்பொழுது குமுதா ஒரு கப்பில் கஞ்சி கொண்டு வந்தாள். அதுதான் அவர்களுக்கு ஆகாரம். தேவஸ்தானத்தின் அன்பளிப்பு. வழக்கமாக குமுதா ஒரு கப்கஞ்சி வாங்கி தான் குடித்துவிட்டு அரைவாசியை தாய்க்குக் கொடுப்பாள். ''அம்மா இந்தாங்கோ கஞ்சி என்று நீட்டினுள்.

ஒருகணம் அவளையும் கஞ்சியையும் பார்த்தாள் ஜானகி. பின் ''நீ குடியம்மா'' என்று அன்பொழுகச் சொன்னுள். ''நான் கந்தசஷ்டி உபவாசம்.'' என்றுள் தொடர்ந்து.

''இந்தப் பிரச்சனைக்கை விரதம் தேவையா சாப்பிடாமல் சாகப் போறியளா'' என்றுள் குமுதா.

## வில்வம் பசுபதி

''இப்பதான் பிள்ளை விரதம் அவசியம் தேவை. வீட்டிலே அம்மாவுக்கு உன்ரை பாட்டிக்கு யார் சாப்பாடு குடுப்பினம். அவசாகலாம் நான் சாகக் கூடாதா'' என்று சொல்லி விட்டு பிராத்தனையில் ஆழ்ந்தாள்.

(14ம் பக்கம் பார்க்க).

# எது வீரம்? எது துறவு?

**நா**யன்மார்களுள் செயற்கருஞ் செயல் செய்தவர்களாக மூவரைக் குறிப்பிட்டவர் பட்டினத்தடிகள்.

'வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன்;
மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன்
தொண்டு செய்து
நாளாறில் கண்ணிடந் தப்பவல் லேனல்லன்;
நானினிச் சென்(று)
ஆளாவதெப்படியோ திருக்காளத்தி
அப்பருக்கே!''

பட்டினத்தார் பார்வையில் நாயன்மார் மூவர் நிற்கின்றனர். வாளால் மகவரிந்தூட்டியவர் சிறுத்தொண்டர். மாதுசொன்ன சூளால் இளமை துறந்தவர் திருநீலகண்டர். ஆறே நாளில் அன்புருவமாகி எம்பெருமானுக்குத் தமது கண்ணை இடந்தப்பியவர் கண்ணப்பர். 'இப்பெருமக்களைப்போல ஏதுஞ் செய்யாத நான் காளத்திநாதனுக்கு ஆளாவது எப்படி?' என அரற்றுகிறுர் பட்டினத்தார்.

பட்டினத்தார் துறவிகளுள் சிறப்பிடம் பெறுபவர். 'உலகைத் துறப்பவன் அவரைப் போலல்லவா துறக்கவேண்டும்!' என்று வாயூறுகிறுர் தாயுமானுர்.

''பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்
பிள்ளையைப் போல்
ஆருந்துறத்தல் அரிதரிது!''

பட்டினத்தார் கிளப்பிய சிந்தனையை யொட்டி இங்கு வாதிடும் நாம் பட்டினத்தார் உட்கிடையை உய்த்துணர வேண்டும்.

இல்வாழ்வில் இருந்துகொண்டு அறஞ் செய்பவர் ஒருசாரார். அவர்களும் நன்றே செய்கிறுர்கள். ஆனுல் இல்வாழ்வைத் துறந்தவர்கள் முன்னையவர்களைவிட கோடி மடங்கு உயர்ந்தவர்கள். உள்ளத்தால் துறவு பூண்டவர்கள் ஏனைத்துறவிகளைவிட நூறு மடங்கு உயர்ந்தவர்கள்.

பட்டினத்தார் உள்ளத்துறவு என்றதத்துவத்தை முன்வைக்கிறுர். என்ன கருமஞ் செய்தாலும் - ஜனகரைப்போல் - பற்றின்றிச் செய்தல், அல்லது கீதாசாரியான் சொன்னது போல, 'பலன்மேல் பற்றின்றிப் பணிசெய்தல்' மிக உயர்ந்த நிலை; கர்மயோகம்.

திருநீலகண்டர் இந்நிலையில் நின்றவர். அவர் பக்தர்; ஆசாரசீலர். அரன்பால் அன்பு பூண்டவர் இறைவனுக்கும் அவன் அடியாருக்கும் தொண்டு செய்பவர். 'திருநீலகண்டம்' என்ற நாமத்தின்மேல் உயிரையே வைத்திருப்பவர். சிற்றின்ப நாட்டங் கொண்டவராய் இருந்தமைதான் இவரிடத்துள்ள குறைபாடு.

ஒருநாள், ஒரு பரத்தைபால் அணுகி அவர் திரும்பியபோது அவர் மனைவி ஊடினுள். இவர் அவளைச் சமாதானப்படுத்த முயன்றுர். அவளோ - இவ்வளவு தூரம் இது வரும் என்று நினைத்திருக்கமாட்டாள் —'தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்' என்றுர். இவருக்கோ திருநீலகண்டத்துக்கு மேலே ஒன்றும் கிடையாது. அந்தத் திருநீலகண்டத்தின் மேலல்லவா ஆணையிட்டுவிட்டாள் இவள்?

இல்லற இன்பத்தை அனுபவிக்கத் துடிக்கும் இள்வயதில் எப்படிப்பட்ட சோதனை! இந்தச் சோதனையை எப்படிச் சந்திக்கிறுர் திருநீலகண்டர்?

''பேதியா ஆணைகேட்ட பெரியவர்
பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி...''

நாம் முன்பின் அறியாதாரைப் பார்க்கிற பார்வை - பொதுப்பார்வை. அவ்வாறு தம் மனைவியைப் பார்த்தார் திருநீலகண்டர், அதாவது, இருவருக்குமிடையே ஒரு திரை விழுந்துவிடுகிறது.

'பெயர்ந்து நீங்கி' என்கிறுர் சேக்கிழார். பெயர்தலும் நீங்குதலும் ஒன்றுதானே? பெயர்ந்து - உள்ளத்தால்; நீங்கி - உடலால்

'பெரியவர்' என்று குறிப்பிடுகிருர் – ஏன்? 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்ற குறளின் ஒளியில் விஷயத்தைக் காணவேண்டும். (இதுவே தலைப்பு என்பதையும் மன்றின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன் )

திருநீலகண்டர் இன்னும் ஒருபடி மேலே போகிருர்' 'என்னை என்னுமல், எம்மை என்றதனுல், உன்னை மட்டுமல்ல - வேறு மாதரையும் மனதாலும் தீண்டேன்!' என்று சூளுரைத்து விடுகிருர்:

இன்பத்துறையில் 'எளியராய்' இருந்த ஒருவர் தமக்கே விதிக்கும் கட்டுப்பாடு -நோன்பு - இது. ஆயின், திருநீலகண்டத்தின் மீது அவருக்கிருந்த மதிப்பு எத்துணையாயிருத்தல் வேண்டும்!

அன்பைத் தலையன்பு, இடையன்பு, கடையன்பு என வகுப்பார் ஆறுமுகநாவலர். நாயகனுடைய நாமத்தைக் கேட்ட மாத்திரத்தே வசமழிதல் தலையன்பு. நாயகனைக் கண்ட மாத்திரத்தே வசமழிதல் இடையன்பு; நாயகனைக் கூடிய மாத்திரத்தில் வசமழிதல் கடையன்பு.

இந்த அளவுகோலைக் கொண்டு பார்ப்போமானுல், மெய்ப்பொருள் நாயனுர் சிவவேடம் பூண்டு வந்த முத்தநாதனைக் கண்ட பின்பு – அவ்வேடத்தின் மீது கொண்ட மதிப்பினுல்–வசமிழந்தார். கண்ணப்பரோ காளத்திமலையிலேறிக் குடுமித் தேவரைக் கண்டபிறகு அன்புருவமானவர். சிறுத்தொண்டரோ கபாலிகரை எதிர்கொண்டு அழைத்துப்போய் அவர் வசமானவர். ஆனுல் திருநீலகண்டர் 'திருநீலகண்டம்' என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தே செயற்கருஞ்செயல் செய்துவிட்டார்!

நடுவர் அவர்களே! உலகியலில், போரில் வெற்றியீட்டியவர்கள் - வீரர்கள் செயற்கருஞ்செயல் செய்ததாகச் சொல்வதுண்டு. மெய்ப்பொருளார் ஓர் அரசர். கண்ணப்பர் போர்த்தொழில்–வேட்டை - வல்லவர். சிறுத்தொண்டரோ வடபுலத்து வாதாபிமேல் படையெடுத்தவர்; சாதனை புரிந்தவர். இவர்களை விடுத்து, ஓர் ஏழைக் குயவரை, செயற்கரிய செய்தவராகக் கொள்வதெப்படி என்று நீங்கள் கேட்கலாம்.

எது வீரம்? எது வெற்றி?

'...புலனைந்தும் வென்ருன்தன் வீரமே
வீரம்'

என்று தமிழ் மூதாட்டி அடித்துச் சொல்கிருள். புரட்சியாளர்களுக்காக, சொல்கிறேன். இக்கருத்து பாரதிக்கும் உடன்பாடே'

'வெற்றி ஐந்து புலன்மிசைக் கொள்வீர்!
வீழ்ந்து பார்மிசை வையம் வணங்கும்!:

திருநீல கண்டருக்கு இறைவனே பெரிய சான்றிதழ் தருகிருன்:

'வென்ற ஐம் புலனின் மிக்கீர்!'

வள்ளுவர் பெருமான் குறிப்பிட்ட 'ஐந்தவித்தான் ஆற்றல்' இதுதான்.

---

## சே.ர. பத்மநாதன்

---

ஓர் ஏழைக் குயவனுடைய ஓலைக்குடிசை காலைக் கையை நீட்டினுல் மட்பாண்டங்கள் உடைய நேரும். இளமைப்பருவம், தனிமை துறவியும் தவறக்கூடிய சூழ்நிலையில் நீலகண்டர் விரதம் காத்தது செயற்கரிய செயலன்றி வேறென்ன? மகாத்மா காந்திக்கே இது 38 வயதின் மேலேதான் முடிந்தது என்ருல், நீலகண்டர் சிகரத்தில் இருக்கிருர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், சேக்கிழார் இவரை முதலில் குறிப்பிடுவாரா;



அகதிகளாக அங்கு இருந்தவர்கள் ஊர்ப் புதினங்களையும், தங்கள் அனுபவங்களையும் பேசிப் பொழுது போக்கும் போது! ஜானகி மட்டும் சஷ்டி விரதம் அனுஷ்டித்துப் பிரார்த் தனையில் ஈடுபட்டிருந்தாள். அவளின் செய்கை பலரின் கவனத்தை ஈர்த்தது.

உள் வீதியில் இடம் இன்றி கேணிப்படிக ளில் இருந்த இளம் பிராயத்தினருக்கு வேடிக் கையாகத் தோன்றியது.

ஜானகியின் பிரார்த்தனையையும் அவள் செய்கையையும் அவதானித்த ஒரு இளைஞன் ஜானகி பெரும் துன்பத்திற்கு உள்ள கியிருக் கிறுள் என்பதை ஊகித்தான் மகள் கொடுத்த கஞ்சியையும் அவள் வேண்டாம் என்று சொன்னது அவனுக்குத் திகைப்பை ஊட்டி யது.

ஜானகியுடன் பேசவேண்டும் என்ற ஆர் வம் ஏற்பட்டது மெல்ல எழுந்து அவளரு கில் சென்றான். அவள் உதடுகள் கந்தர் சஷ்டிக் கவசத்தைச் செபித்துக் கொண்டிருந் தன ''காக்க காக்க கனகவேல் காக்க நோக்க நோக்க நொடியி னேக்க'' என்ற வரிகளை அவன் கேட்டதும், அவளை குழப்பாது திரும் பித்தன் இடத்திற்குப் போகலாமா என்று எண்ணியவன் திரும்ப மனமின்றி ''அம்மா'' என்று அழைத்தான்.

அந்தச் சொல் அவள் உடலைப் புல்லரிக்க வைத்தது. கண்களைத் திறந்து பார்த்தாள் இரண்டு கிழமைகளாகச் சவரம் செய்யப்ப டாது, முகத்தில் தாடி, மீசை அரும்ப,சுருள் தலையுடன் ஒரு இளைஞனைக் கண்டதும் ஆச்ச ரியப்பட்டாள்.

''என் மகன் கூப்பிட்டது மாதிரி இருந் தது.நீ யாரப்பா. என்ன வேணும்'' என்றாள்.

''மகனு'' என்று கேட்டான்.

''பள்ளிக்கு போனவன், திரும்பி வர வில்லை. எண்பத்திநாலாம் ஆண்டு ஓ எல் படித்தான். இனி வர மாட்டான்'' என்றாள் கண்கலங்க. தொடர்ந்து ''நீ யாரப்பா'' என்றாள்.

''அம்மா உங்களைப்போல் நானும் ஒரு அகதிதான். இங்கிலாந்தில் டாக்டராயிருக்கி றேன். அம்மாவைக் கூட்டிப்போக வந்தேன். திடீரென பிரச்சனை துவங்கியது. இப்போ அகதியாக இருக்கிறேன்'' என்றான்.

''பிரச்சனை முடிந்ததும் அம்மாவைக் கூட்டிக் கொண்டு போகலாம் தானே.''

''அம்மா விசா, பாஸ் போட் ஒன்றும் தேவையில்லாத உலகத்துக்குப் போய் விட்டா அதிர்ச்சியாலும் பயத்திலும் மாரடைப்பு வந்து இறந்திட்டா. ஒன்றும் செய்ய முடியலை. வளவிற்குள்ளேயே அடக்கம் செய்துவிட்டு இங்கே இருக்கிறேன்'' என்றான்.

''முருகா முருகா'' என்றபடி கண்களை மூடியபடி ஒரு கணம் இருந்தான். உள்ளத்தில் வேதனைச் சுமையைத் தாங்கி இப்படி எத்தனை பேரோ என்று எண்ணினான்.

தன் தாயைப் பற்றியும், மகளுடைய நகைகளைப் பற்றியும், சொன்னாள். தனது வீடு இருக்கும் இடமும், தாங்கள் வரவேண் டிய சூழ்நிலையையும் சொன்னாள்.

துன்பத்தைப் பிறரிடம் பகிரும் போது மனம் பாரம் குறைகிறது. மனம் சிறிது தெளிவு பெறுகிறது.

''நீங்கள் கஞ்சி கூடக் குடியாது இருப் பதை அவதானித்தேன். மனம் கேட்கவில்லை. அது தான் உங்களிடம் வந்தேன். ஒன்றுமே சாப்பிடாவிட்டால் உடம்பு பலவீனப்படுமே'' என்றான்.

தன்னில் அவன் காட்டும் அன்பையும் அக் கறையையும் கண்டு மனம் பூரித்துப் போனாள்.

தம்பி நான் வருடா வருடம் அனுஷ்டிக் கும் விரதம் இது. இரவில் இளநீர் அல்லது தண்ணீர் குடிப்பேன்.எனக்கு ஒன்றும் வராது. பயப்படாதே'' என்றான்.

அந்த இளைஞன் தன் இருப்பிடம் போய் விட்டான்.

அவனுடைய பேச்சும், செய்கையும் குமு தாவிற்கு வியப்பை ஊட்டியது அவள் அரு கில் இருந்தும், அவளைப் பார்க்கவோ, அவளு டன் பேசவோ இல்லை.

புதுமையான இளைஞனாகத் தோன்றினான்.

அடுத்தநாள் அவன் இருந்த இடத்தை குமுதாவின் கண்கள் தேடின. அவன் வழக்க மாக இருக்கும் இடத்தில் இல்லை. அவளுக்கு ஆச்சரியமாகவும், ஏமாற்றமாகவும் இருந்தது.

கந்தர் சஷ்டியும் முடிந்து ஒரு கிழமைக்கு மேலாகி விட்டது.அவன் மாயமாய் மறைந்து விட்டான்

நிலமை ஓரளவு சீராகி விட்டதை உணர்ந்து சிலர் வீடுகளுக்குத் திரும்பினர். ஜானகியும் வீட்டிற்குச் சென்றாள்.

அவளுடைய தாயாருக்கு என்ன நேர்ந்திருக்கும் என்ற துடிப்பும் பதட்டமும் மேலோங்க முருகனை வேண்டிக் கொண்டு சென்றாள். வீட்டை அண்மிக்க உடம்பு நடுங்கி, நெஞ்சம் பதை, பதைத்தது.

வீடு ஒருவித சேதமும் இன்றி இருந்தது. '' அம்மா, அம்மா '' என்று குரல் கொடுத்தாள். எவ்வித பதிலும் இல்லை. மெல்ல கதவில் கை வைத்தாள். கதவு திறந்தது.கதவு பூட்டப்படாது சாத்தப்பட்டு இருந்தது. குமுதா பின் தொடர, அவள் உள்ளுக்குச் சென்றாள்.

கண்கள் நீரைச் சொரிய, உடல் நடுங்க '' அம்மா அம்மா '' என்று கத்திக் கொண்டு வீடு முழுவதும் தேடிய ஜானகி தாய் இல்லாததைக் கண்டு ' அம்மா என்னை விட்டுப் போய்ட்டீங்களே உன்னை நான் கொன்று விட்டேன் '' என்று குரலெடுத்து விம்மியழுதாள்.

நகைகள் வைத்த இடத்தைப் பார்த்தாள் குமுதா. நகைகளும் இல்லை. '' அம்மா நகையையும் காணேல்லை '' என்றாள்.

'' எல்லாமே போய்விட்டதே. முருகா என்னை ஏமாத்திட்டியே. என்னை கைவிட்டுட்டியே '' என்று சொல்லி அழுதாள்.

அப்பொழுது யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. ஓடிப் போய்ப் பார்த்த குமுதா மகிழ்ச்சியுடன் '' அம்மா, அம்மம்மா வந்திட்டா '' என்று கத்தினாள்.

வாசற்படிக்கு ஓடிவந்த ஜானகி கண்ட காட்சி அவளுக்குப் பிரமிப்பையும் களிப்பையும் ஏற்படுத்தியது. ஆனந்தத்தால் அவளுக்குப் பேச்சே வரவில்லை.

அந்த இளைஞனுடன் அவள் தாயார் சிரித்த முகத்துடன் வீட்டுப் படியேறினாள்.

ஜானகி கண்களில் ஆனந்தக் கண்ணீர் கரைபுரண்டோட ஓடிப் போய் தாயாரின் இரு கைகளையும் முத்தமிட்டாள்.

இளைஞனைப் பார்த்து '' தம்பி பெரிய மர்மமாயிருக்கே. எப்படி இவ உங்ககிட்ட வந்தா '' என்றாள்.

'' அம்மா நீங்க அன்றைக்குச் சொன்ன விபரம் கேட்டிட்டு இங்கே வந்தேன். என்னுடைய அம்மாவுக்கு நிகழ்ந்தது இவவுக்கு நிகழக் கூடாதல்லவா. அவவை வற்புறுத்தி லேடீஸ் கொலிச் அகதி முகாமுக்குக் கொண்டுபோனேன். அங்கை வசதிகள் கூட. இன்றைக்கு நல்லூருக்கு போன போது நீங்க இல்லை உடனே இங்கை வந்திட்டோம். அம்மாவை ஒப்படைச்சிட்டேன். இன்னொரு பொருள் இருக்கு ''என்று சொன்ன வண்ணம் சேர்ட்டை மேலே இழுத்து விட்டு அரையில் கட்டியிருந்த பையை அவிழ்த்து எடுத்தான்.

'' இந்தாருங்கள் உங்கள் நகை '' என்று கொடுத்தான். இரு கைகளையும் நீட்டி அதை வாங்கிய ஜானகிக்குப் பேச நாஎழவில்லை.

'' அம்மா நான் போய்வருகிறேன். ஆஸ்பத்திரிக்கு உடனே போகணும் '' என்றான்.

'' ஆஸ்பத்திரிக்கா. ஏன் '' என்றாள்.

'' இரத்த தானம் செய்யணும். பலருக்கு இரத்தம் தேவைப்படுகுது '' என்றான்.

'' தம்பி என்னிடம் வஞ்சகம் சூது இல்லை. வெளிப்படையாகக் கேக்கிறன். நீ என் மகன் போல வந்தாய். உன்னை என் மருமகனாக எடுக்க ஆசைப்படுகிறேன் '' என்றாள்.

சிலையாய் நின்றான் அந்த இளைஞன்.என்ன சொல்வதென்று தெரியாமல் நின்றான்.

ஜானகி கேட்டாள் ''தம்பியின்ரை பெயரே தெரியாது. என்ன பெயர் தம்பி.''

சுகுமார் அம்மா. நீங்க இப்ப கேட்டது. எனக்கு அதிர்ச்சியாயிருக்கு'' என்றவன்

(23 ஆம் பக்கம் பயர்க்க)

புராணக் கதைகளைக் கண்ணை மூடிக்கற்றல் இனிமுடியாது; ஒன்று அவற்றிற்கு உட்பொருள் கண்டு உணர்ந்து போற்றல் வேண்டும் அல்லது அவை இக்காலத்திற்கு உதவாதவை என கைவிடுதல் வேண்டும். பல கதைகள் நல்ல உவமைகள் போல் எளிதில் உட்பொருள் உணர்த்தக் காண்கிறோம் சில கதைகள் மட்டுமே பயனுள்ள உட்பொருள் உணர்த்தாமல் உள்ளன. அவற்றை மட்டும் விட்டு, மற்றவற்றால் பயன் பெறலாம். இந் நெறியிற் சென்றால்தான் முன்னோருடைய பாடல் பல நம் நெஞ்சத்திற்கு நல்லனவாய் அரும் பயன் நல்குகின்றன.

சிவபெருமான் தாருக வனத்து முனிவர்கள் ஏவிய யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார் என்பது புராணக் கதை 'பனைக்கை மும்மதவேழம் உடுத்தவன்' என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

அதன் கைகரிய பனைமரம்போல உள்ளது போர்க்களத்தில் வெட்டப்பட்ட யானைகளின் கைகள் விழுந்து கிடக்கும் காட்சிக்கு உவமையாகத் தமிழ் இலக்கியத்திற் கூறப்படுவது பனந்தோப்பில வெட்டப்பட்டு விழுந்திருக்கும் பனைமரங்களாகும். ஆதலின் பனைபோன்ற தும்பிக்கையையுடைய யானை என்று கூறுவது மரபாகும் இங்கு மதம் பிடித்தயானையைக் கூறுமிடத்தில் அதன் கைமட்டும் சிறப்பித்துக் கூறப்படுவது பொருத்தமாகும் ஏனெனின் மதம் பிடித்த நிலையில் அதன் அழிவு வேலைகள் பெரும்பாலும் அந்தக்கையாலே நடைபெறுகின்றன தன் முனைப்பு மிகுந்த நிலையை

''இருகை யானையை ஒத்திருந் தென்னுளக் கருவையான் கண்டிலேன் கண்டது எவ்வமே', என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டிருந்தாலும் இங்கு கருதத்தக்கதாகும் யானையின் மதம் அதன் உடம்பில் முற்பகுதிபில வெளிப்படுவதால் மும்மதம் எனப்படுவதாகும். இத்தகைய யானையின் தோலை உரித்தவன் இறைவன் என்னும் இந்தப்பாட்டின் உட்பொருள் உயிர்களின் யான் எனது என்னும் செருக்கைப் போக்கி ஆட்கொள்பவன் என்பதாகும்.

# நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்

## ஆட்கொள்பவன்:

மதம் கொண்ட யானை செருக்குக்கு அறிகுறியாகக் கொள்ளத் தக்கது. செருக்கு உண்மை நிலையை உணரவொட்டாமல் தடுப்பது. ஒருவருக்கு உரிமை அல்லாததையும் உரிமையாக உணர்ந்து தடுமாறச் செய்வது அதற்கு உவமைபோல் இருப்பது மதயானை அந்தயானை மதம் கொண்டபோது தான் யான் தன்னைப் போற்றிக் காக்கும் பாகன் யார் தன்கடமை என்ன முதலிய எல்லாவற்றையும் மறந்து தன்விருப்பம்போல் திரியும் எதிர்ப்பட்டோர்யாராக இருந்தாலும் கொல்ல முயலும், கொல்லும், தனக்கு நன்மை செய்வோருக்குத் தீமை செய்யும். கட்டுக்கு அடங்காது. அத்தகைய யானைக்கு அந்த மதத்தின் கொடுமையைத் தூண்டிவிடுவதுபோல் உள்ளது. அதன் நீண்ட வலியகை கருநிறமாய்ச் சருச்சரை மிக்கதாய் நீண்டு திரண்டுள்ள

## நெஞ்சமே கோயில்:

குடும்பம், தெரு, ஊர், நாடு என்னும் குறுகிய எல்லைக்குட் கட்டுப்படாத அறிவு பெற்று உலகத்தையும் உலகத்து உயிர்களையும் இவற்றின் படைப்பையும் எண்ணி பரந்த பெரிய உலக இயக்கத்தில் தன் வாழ்வும் ஒரு சிறு பகுதி என்று எண்ணுவதே சமய நெறியாகும் எங்கும் அசைந்தும் வீசியும் இயங்கும் காற்றும் என்னும் பெரும் பொருளில் ஒரு சிறுபகுதியே நம் கை விசிறியால் வீசி நாம் எழுப்பும் சிறு காற்று. எங்கும் பரந்து உள்ள கதிரவனுடைய ஒளியில் சிறு பகுதியே நம் வீட்டு சன்னல் வழியாக நாம் பெறும் ஒளி

இவைபோல் நம் வாழ்வு நெடுங்காலமாக இயங்கி வரும் உயிர்களின் இயக்கத்தில் ஒரு சிறுபகுதி என்று எண்ண வேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் வரவேண்டுமானால் இந்த உடம்பும் இதன் செயல்களும் இந்த உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் பெருஞ் சக்திக்கு உரிமையானவை என்று தெளிவு பிறக்கவேண்டும். யான் எனது என்னும் செருக்கு அறுத்தலும் இந்த நிலேயும் ஒரே வகையானவை என்று விளங்குகின்றன. இத்தகைய நினைவு மிகமிக அந்தத் தூய நெஞ்சத்தில் ஓர் உடம்பைப் பற்றிய சிறு நினைவும் குறைந்து உலக இயக்கத்தைப் பற்றிய சிறு நினைவு பெருகும். அதற்கு காரணமான பரம் பொருளின் சார்பு மிகும். ஆகவே அந்த நினைவு மிகுந்த நெஞ்சம் சிவபெருமானுடைய கோயில் என்று கூறப்படுகின்றது. சிவபெருமான் தன்னை நினைப்பவரின் நெஞ்சமே கோயிலாகக் கொண்டவன் என்பது அக் கருத்தாகும். 'நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்' என்கிறார் திருநாவுக்கரசர்.

பயன்படுவதாற் போற்றுகிறோம். பிற்காலத்தில்தான் வாய்ப்பாட்டின் பொருள் தெளிவாகிறது. ஏதேனும் ஒரு பொருளை ஏழு ஏழாக எண்ணி அப்படி ஐந்து அடுக்கு அடுக்கினால் அந்த பொருளின் மொத்ததொகை முப்பத்தைந்தாக இருக்கக் காண்கிறோம். வாய்ப்பாட்டின் பொருளை உணர்கிறோம்.

முதலில் கற்ற கண்மூடி வாய்ப்பாட்டிற்கும் பிறகு தெளிந்த எண் விளக்கத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. கோயிலில் இறைவனைக் கண்டு வழிபாடு செய்வதற்கும் உலகப் படைப்பிலே இறைவனைக் கண்டு உருகுவதற்கும் இடையே அவ்வளவு பெரிய வேறுபாடு உள்ளது. முன்னது மற்றதற்குத் துணையாக தூண்டுகோலாக அமைந்துள்ளது. வழி அமைத்துக் கொடுக்கிறது. இது மறுக்க முடியாது. ஆனால் கோவிலிலே மட்டும் இறைவனுடைய நினைவு கொண்டிருந்து கோயிலை விட்டு வெளியே வந்து காணும் பொருள்களிலும் கேட்கும் ஒலிகளிலும் மற்றவற்றிலும்

அம்பலக்கூத்தன் என்பது அரியகருத்துப் பொதிந்த அழகிய தொடராகும். உலகம் எங்கிருந்து எவ்வாறு தோன்றியது. அதன் இயக்கம் எத்தகையது. அணுக்கள் எல்லாம் இயங்குவதற்குக் காரணம் என்ன, இயங்கும் முறை என்ன என்று விஞ்ஞானம் ஆராய ஆராய இத்தொடர் நுண்ணியதாய்ப் பொருள் பயக்க வல்லதாகும்.

வெட்ட வெளியில் ஆடும் படைப்புச் சக்தியே, அம்பலத்திற் கூத்தாடும் நடராசத் தெய்வமாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது என்ற உண்மை எதிர்கால அறிவியல் ஆராய்ச்சிகளால் தெளிவு செய்யப்படும். இந்த உண்மையை நுட்பமாக உணர்ந்த சான்றோர் திருநாவுக்கரசர் அனைத்து வேடமாகவுள்ள இறைவனே அம்பலத்திற் கூத்தாடுபவனாக உள்ளான் என்கிறார்.

## பெருஞ்சக்தி

ஏழைந்து முப்பத்தைந்து $(7 \times 5 = 35)$ எனச் சிறுவயதில் வாய்ப்பாடு கற்கிறோம். அப்போது அதன் பொருள் தெளிவாக விளங்குவதில்லை. ஆசிரியர் வற்புறுத்துவதால் கண்மூடிக் கற்கிறோம். கணக்குக் கற்பதற்கு இந்த வாய்ப்பாடு பயன்படுவதால் மகிழ்கிறோம். தொடர்ந்து வாய்ப்பாட்டை போற்றுகிறோம். ஆனால் $7 \times 5 = 35$ என்பது உண்மையை உணர்த்துவதாகாது. அதை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பவரும் உண்மையை உணர்ந்தவராகார். இவைகள் எல்லாம் வெறுமையான எழுத்துக்களே. எண்ணின் அறிகுறிகளே பொருள் விளங்காவிடினும்

டாக்டர். **மு. வரதராசன்**

அந்த பெருஞ்சக்தியை மறந்துநின்றால் ஒரு பலனும் விளையாது. உள்ளம் சிறுபிள்ளைத் தன்மையாக வளர்ச்சிபெறாமல் நிற்கும் வரையில் அறிகுறி தவிர வேறுவழி இல்லை. உள்ளம் வளர்ச்சி பெறப்பெற அறிகுறியைக் கடந்து அறிபொருளை கருத்தை உணர்தல் வேண்டும். கோயிலில் இறைவன் உள்ளான். என்று கைகூப்பும் நிலையில் இருந்து உலகத்து உயிர்களின் வாழ்வில் எல்லாம் கலந்துநின்று இயக்கும் பெருஞ்சக்தியாய் உள்ளவனே இறைவன் என்று உணர்ந்து உருகும் நிலைக்கு வளர வேண்டும்.

## ஞானக்கதிர்! ஞாலம் முழுதும் பரவட்டும்!

முறையாய் வாழ்க்கை அமைத்திட நன்றாய்
மதமே காட்டும் மகத்துவ நெறியை
நிறைவாய் தந்து நல்லவர் ஞானிகள்
நடந்து சென்ற பாதையும் விளக்கி
இறையாய் உணர்வாய் இயங்குஞ் சக்தியில்
ஈடு பாட்டினை மேலும் வளர்க்கும்
துறையில் தரமாய்த் தொண்டுகள் செய்தே
ஞானக் கதிரே பரந்து வாழ்க!

நாயன்மார்கட்டு: ப. மகேந்திரதாசன்

# நினைப்பவர் ....

### அம்பலக்கூத்தன்

அம்பலக்கூத்தன் என்பது அரியகருத்துப் பொதிந்த அழகிய தொடராகும். உலகம் எங்கிருந்து எவ்வாறு தோன்றியது. அதன் இலக்கியம் எத்தகையது. அணுக்கள் எல் லாம் இயங்குவதற்குக் காரணம் என்ன, இயங்கும் முறை என்ன என்று விஞ்ஞானம் ஆராய ஆராய இத்தொடர் நுண்ணியப் பொருள் பயக்கவல்லதாகும். வெட்டவெளியில் ஆடும் படைப்புச் சக்தியே, அம்பலத்திற் கூத் தாடும். நடராசத் தெய்வமாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது என்ற உண்மை எதிர்கால அறிவியல் ஆராய்ச்சிகளால் தெளிவு செய்யப் படும். இந்த உண்மையை நுட்பமாக உணர்ந்த சான்றோர் திருநாவுக்கரசர் அனைத்து வேடமாக உள்ள இறைவனே அம்பலத் கூத்தாடுபவனாக உள்ளான் என்கிறார்.

### பரந்த உலகிற் பரம்பொருள்

அனைத்தும் அவனாக இருக்கிறான் என்று கூறாமல், அனைத்து வேடமாகவும் இருக்கி றான் என்கிறார். வேடம் என்ற சொல் பொருள் பொதிந்த சொல்லாக உள்ளது. நம் கண்ணுக்குத் தோன்றுவன எல்லாம் தோற்றங்களே அல்லாமல் பொருள்களின் உண்மை வடிவங்கள் அல்ல. அவை எல்லாம் வேடங்களே இந்தத் தோற்றங்கள் எல்லாம் மாறும், இன்று ஒரு வடிவாக இருந்து நாளை ஒரு வடிவாக மாறும் தன்மையான இவை, இவற்றைக் கண்டு இந்த வேடங்களே பொருள்கள் என்று எண்ணிவிடலாகாது. மாறும் தோற்றங்களுக்கு இடையே மாறாத உயிர்சக்தியைக் காணுதல் வேண்டும் அதற்கு அடிப்படையானதே பரம்பொருள் ஆயினும் இந்த வேடங்களெல்லாம் அந்தச் சக்தி மேற்கொண்ட வேடங்களே எனப்பல வாறு எண்ணி உணரத்தக்க கருத்துக்கள் பலவும் அந்த சொல்லிற் பெறக் கிடக்கின் றன.

இல்வாழ்க்கை நடத்தும் நங்கை ஒருத்திதான் இன்ன குடும்பத்தான் என்பதைக் கனவிலும் மறக்கமுடியாது காரணம் அவள் தன்வாழ்வை அந்த அளவிற்குக் குடும்பத்தோடு பிணைத் துக் கொண்டுள்ளாள். திருநாவுக்கரசர் போல இயற்கைப் படைப்பையும் உயிர்களின் வாழ் வின் போக்கையும் அவற்றின் அடிப்படையை யும் எண்ணி உணர்ந்து தெளிந்தவர் பரம் பொருளை எந்நிலையிலும் மறந்து வாழமுடி யாது. காரணம் அவருடைய வாழ்வு பரந்த பெரிய உலக இயக்கத்தில் ஒருபகுதி என்ற உண்மை அவ்வளவு தெளிவாக நெஞ்சிற் பதிந்துவிட்டது.

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே.

★

# எது நல்ல நாடு?

ஆன்மீகம் என்று சொல்வது தனிமனிதனுடைய மனதை செம்மைப்படுத்துவது. ஆன்மீகத்தினுடைய மிகப் பெரிய குறிக்கோள் நாம் நம்முடைய உயிரை எந்தளவுக்கு மிகப் பெரியதாகப் போற்றுவோமோ அதேபோல எல்லாருடைய உயிர்களையும் போற்றுதல் என்பது ஒன்று.

இந்த உலகில் இருக்கிற எல்லா மக்களும் நம்மை எப்படி இறைவன் படைத்திருக்கிருனே அதைப்போல ஏனைய உயிர்களையும் படைத்திருக்கிருன் என்று கருதி சகோதரத்துவமான அன்புநெறியைச் செலுத்துவது. இரண்டு இவைதான் ஆன்மீகத்தின் குறிக்கோள். உலகம் கெட்டுவிட்டது என்று அடிக்கடி சொல்லுகிறோம், உலகம் என்ருல் எது? மாடமாளிகை கூட கோபுரங்களா உலகம்?

## நல்ல நாடு எது?

சங்க காலத்தில் ஔவையாரைக் கேட்டார்கள். நீங்கள் நல்ல நாடு என்று எதைக்கருதுகிறீர்கள் என்று.



புலவர்; கீரன்

அதற்கு ஔவையார் ''அது மேடாக இருக்கட்டும், பள்ளமாக இருக்கட்டும், நகரங்களாக இருக்கட்டும்; மக்கள் நல்லவர்களாக இருந்தால் அதுதான் உயர்ந்த நாடு'' என்று.

உலகம் என்பது அங்கு வாழும் மனிதர்களின் பண்பின் அடிப்படையில் வைத்துத்தான் மதிப்பிடப்படுகிறது. எனவே உலகம் கெட்டு விட்டது என்று சொன்னுல் உலகில் வாழும் பெரும்பாலான மனிதர்கள் கெட்டு விட்டார்கள் என்பது தான் பொருள். உலகம் நன்ருக இருக்கிறது. என்று சொன்ஞல் உலகத்தில் உள்ள பெரும்பாலான மனிதர்கள் நன்ருக இருக்கிருர்கள் என்பது தான் பொருள்.

ஆகவே தனிமனிதர் ஒவ்வொருவரையும் நல்லவராக ஆக்கி விட்டால் உலகம் தானுகவே நன்ருகி விடும் அதற்கு பயன்படுவது தான் ஆன்மீகம்

தனிமனிதன் நன்ருக அமையாத வரைக்கும் உலகம் நன்ருக இல்லை என்று சொல்வதில் பயன் இல்லை. காரணம் உலகம் என்று ஒன்று இல்லை. தனிமனிதர்களின் கூட்டுக்குத்தான் உலகம் என்பது பொருள். மனிதனை ஒழுங்காக வைத்தால் உலகம் தானுக ஒழுங்காகும்.



## பாபா அருள் வாக்கு

கடவுள் களங்கமற்ற மனத்திலேதான் பிரகாசிக்க முடியும். பொருமை என்பது களங்கங்களிலே மிக ஆபாசமான குணமாகும். தற்பெருமை, பொருமை அகங்காரம் ஆகிய மூன்றும் உறவினர்கள். அவை மானிடனின் முன்னேற்றத்தை வேரிலேயே அழிக்கின்றன. நீ ஒரு பக்தன் என்று கர்வங் கொள்வது, இறைவனைச் சமீபித்துக் கொண்டிருக்கிறோம் என்றிருப்பது, இவையெல்லாங்கூடக் களங்கங்கள் தான்.

# பிறந்த நாள் விழா

—ஒரு சமயக் கண்ணோட்டம்

உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. அது எப்பொழுது படைக்கப்பட்டது, அதில் தாவரங்கள் எப்பொழுது தோன்றின, விலங்குகளும், மனிதர்களும் மற்றைய ஜீவராசிகளும் எப்பொழுது தோன்றின என்றெல்லாம் நாம் நினைத்துப் பார்க்கின்றோம். ஆனால் விடை காணமுடியவில்லை. விஞ்ஞான ஆராய்ச்சிகள் பலவாறாக முடிவுகளைக் கூறுகின்றன.

எமது சமயத்திற்கு அடித்தளமாக விளங்கும் வேதங்களினது அங்கங்களில் இவற்றிற்கெல்லாம் விடை காண்பதற்கான விபரங்களும் வழிகளும் கூறப்பட்டுள்ளன உதாரணமாக எந்த ஒரு நிகழ்ச்சியும் அனைத்துலகிலும் காலத்தை நிர்ணயம் செய்து கொண்டே தொடங்கப்படுகின்றது, நடத்தப்படுகின்றது, முடிக்கப்படுகின்றது எத்தனையோ காரியங்கள் காலப் போக்கை அடிப்படையாக வைத்தே நடைபெறுகின்றன. எம் சமய நிகழ்ச்சிகள் கால நிர்ணயப்படியே நடக்கவேண்டும் என்ற நியதியை நாம் அறிந்திருக்கின்றோம்.

எங்களுக்குத் தெரிந்த அல்லது நாம் அறியக்கூடிய ஒரு விடயத்தைப் பற்றி இந்த அடிப்படையில் நாம் அதிகம் கருத்தில் கொள்வதில்லை அந்த விடயம் தான் பிறந்த நாள் எனப்படுவதாகும். தோன்றும் பொருட்களுக்கெல்லாம் பிறந்த நாள் உண்டு. சிவபெருமான் ஜோதிப் பிளம்பாக அடி முடி காண முடியாத வகையில் தோன்றியதும் அனைவருக்கும் புலப்பட்டதும் சிவராத்திரி தினமாகும். இதே போலத் திருமாலின் அவதாரங்கள் அனைத்திற்கும் அவதார நாள் உண்டு.

கிருஷ்ண ஜயந்தி, ஸ்ரீ இராம நவமி என்பவை பிறந்த நாட்களேயாம்.

பிறந்த நாளுக்கு நாம் சிறப்புக் கொடுக்கின்றோம். உற்றார், நண்பர்கள் ஆகியோருடன் விழாக் கொண்டாடி மகிழ்வுடன் விருந்து உண்கின்றோம். இதை ஏன் செய்கின்றோம், இதன் தத்துவம் என்ன என்று சற்று சிந்திப்போம்.

எங்கும் பரவி நிற்கும் பரமாத்மாவின் அம்சமான ஜீவாத்மாக்கள் முத்தி பெறாத நிலையில், ஒருடலை விட்டு நீங்கியவைகளாக மற்றுமொருஉடலில் பிரவேசிக்கத் தொடங்குவதே பிறந்த தினம். இறை சக்தி ஓரிடத்தில் ஒரு குறிக்கோளுடன் அத்திவாரம் இடும் நிலையாகவே அது அமைகின்றது என்பர் அறிஞர். அந்த ஜீவாத்மாவின் தோற்றம் வேறொரு ஜீவாத்மாவின் மூலமும் ஏற்படுகின்றது. அதனாலேயே பற்று என்பதும் உறவு என்பதும் உலகிலுள்ள உயிர்களிடத்தில் முற்றாகப் பரவி நிற்கின்றது,

ச. ந. நடராஜன்

நாம் ஒரு மரத்தை உண்டாக்க வித்திட்டால், அது வளர்வதற்குரிய இயற்கையான ரீதியில் அதை வளர்க்கின்றோம். நாம் உண்ணும் உணவு வகைகளையோ அல்லது வேறு மரங்களுக்கு என்று ஏற்பட்ட உணவு வகைகளையோ அல்லது பொருட்களையோ இட்டு வளர்ப்பதில்லை, அதே போல் எம்மால் உறவு கொண்டாடப்படக் கூடிய நிலையிலுள்ள உயிர்களின் வளர்ச்சி தகுந்த இயற்கையான, அதாவது சமயத்தத்துவ ரீதியிலேயே அமைய வேண்டியது அவசியமாகின்றது. இதை மீறுவது தீய விளைவுகளைத் தோற்றுவிக்கும் தெய்வத்தை வழிபட்டே அதன் அம்சமாக விளங்கும் உயிர்கள் சீருடன் வாழ வழி பெறவேண்டும். அவன் அருளாலே அவன் தாள் வணங்க வழி காணவேண்டும். உயிர்களின் உள்ளத்தில் இறைவன் இருக்கின்றான். உய்ய என் உள்ளத்து ஒங்காரமாய் நின்ற மெய்யா என்று மணிவாசகப்பெருமான் இதையே குறிப்பிடுகின்றார். நாம் பிறந்த குழந்தை

# சங்கீதவுலகில் இப்படியும் நடக்கிறது

"தீபக்" ராகம் பஞ்சாட்சர மூர்த்தியின் ஐந்து முகங்களில் ஒன்றிலிருந்து தோன்யது. இதனை முறையாக பாடினால் தீ தானாக பற்றும் கோபால்நாயக் என்னும் வித்துவான் ஒருதடாகத்தில் கழுத்தளவு தண்ணீரிலிருந்து இந்த ராகத்தைப் பாடினர். அவர் தலை தீப்பற்றி வெடித்து இறந்தார். சக்கரவர்த்தி அக்பரின் ஆணையின் மேல் தான் சேன் தீபக் ராகத்தை தர்பாரில் பாடினர். அவர் பாட வெப்பம் அதிகரித்தது. மரங்களிலுள்ள இலைகள் வாடி விழுந்தன. தர்பாரில் விளக்குகள் தாமாகவே எரியத் தொடங்கின.

இந்நூற்றுண்டு முற்பகுதியில் தான்தேசன் வம்சாவழியினரான உத்தாஸ் முகமது அலி ராம்பூர் நவாப்பின் அவையில் தீபக் ராகத்தை ஸரோட்டில் வாசித்தார். அது தீப்பற்றியது. அந்தவாத்தியம் ராம்பூர் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பதினெட்டாம் நூற்றுண்டில் புதுக்கோட்டை அரச மாளிகையில் தன்குரு சொந்த வெங்கடராமய்யா, மற்றும் பல வித்துவான்கள் முன்னிலையில் தியாகராஜ சுவாமிகள் ஜோதிஸ்வரரூபினி ராகத்தைப் பாடி மாளிகை விளக்குகள் தாமாகவே எரியச் செய்தார் என்று புதுக்கோட்டை மாளிகை சரித்திரத்தில் கூறப்படுகிறது.

'தீபக்' ராகத்திற்கு மாற்று ராகமாக அமைந்தது 'மேக்' ராகம் இதுவும் பஞ்சாட்சர மூர்த்தியின் முகங்கள் ஒன்றிலிருந்து தோன்றியது. அகபர் அவையில் தான்சேன் தீபக் ராகத்தைப் பாடி விளக்குகள் எரியத் தொடங்கியதும் அவரது மனைவி ஹீசேனியும் மகள் சரஸ்வதியும் 'மேன்மல்கார்' ராகத்தைப் பாடினர்கள். கார்மேகங்கள் கூடி மழை பெய்தது.

**எஸ். கனகசபை**

கர்நாடக சங்கீதத்தில் அமிர்தவர்ஷனி ராகம் மழையை கொண்டுவரும். முத்துஸ்வாமி தீட்ஷர் பிரயாணம் செய்யும்போது வரட்சி காரணமாக வழியில் தண்ணீர் கிடைக்கவில்லை. அமிர்தவர்ஷினி ராகத்தில் ஒரு பாடலை இயற்றி தனது மாணவர்களை பாடும்படி சொன்னர். அவர்கள் பாடியதும் மழை பெய்யத் தொடங்கியது.

# பிறந்த . . . . .

கட்குப் பெயரிடும்பொழுது இறைவனது பெயர் ஒன்றையே தெரிவு செய்வதும் இதனலேயே என்று உணர வேண்டும்

இறைவனுக்கு வணக்கம் செய்து, பணிகள் புரிந்து, பாடிப் பரவி அதன்மூலம் எடுத்த பிறவியின் பயனைப் பெறுவதற்கு அருளுமாறு வழிபடுதலே பிறந்தநாளை முறையாகக் கொண்டாடுவதாகும். பிறந்த நாள் கொண்டாடப்பட வேண்டிய மிகப் புனிதமான தினம் என்பது சாஸ்திரங்களின் கூற்றுகும்.

பிறந்த நாளில் உயிர்களுடன் நல்லுறவுடன் வாழவேண்டும். அனைவரையும் மகிழச் செய்யவேண்டும்; செல்வச் செழிப்பு காரணமாக நாம் எம் சமய அடிப்படையிலான உயர்ந்த காரியங்களைச் செய்யத் தவறிவிடுகின்றோம். தகுந்தமுறையில் பிறந்தநாளைப் போற்றிக் கொண்டாடுவதாயின், எமது சமய மரபின்படி ஒவ்வொரு ஆண்டிலும், நாம் பிறந்த தமிழ் மாதத்தில், நாம் பிறந்த நட்சத்திரம் பொருந்துகின்ற தினத்தில் அதைச் செய்தல் வேண்டும். ஆங்கிலத் திகதி மாதம் என்ற முறையில் செய்வதில் யாதொரு பலனும் இராது.

பிறந்த நாளன்று முறைப்படி செய்ய வேண்டிய சமயச் சடங்குகள் பல உள்ளன. தெய்வ வழிபாடு, மிருத்யஞ்ஜய ஹோமம் நவக்கிரஹ ஹோமம், கோதானம், ஸ்வர்ண தானம், தானிய தானம், வஸ்திர தானம், அன்னதானம் என்பனவற்றில் சக்திக்கேற்றவற்றையாவது செய்தல் நன்மை பயக்கும். வயதில் பெரியோர்களாகிய தாய் தந்தையர்கள், மற்றும், கல்வியூட்டிய குரு இவர்களையும் வணங்கி ஆசிபெற்று பிறந்தநாளை நினைவிற்கொள்ள வேண்டும்.

**யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சிவஞானத் தமிழ் மாநாட்டில் இடம்பெற்ற கருத்தரங்கில் தமிழ்றிஞர்கள் வழங்கிய கருத்துக்களின் தொகுப்பு இது.**

நாயன்மார்களிலே அறிவுடையவர்கள் இருந்தார்கள். அறிவுச் சூழலில் இருந்தவர்கள் இருந்தார்கள், ஞானிகள் இருந்தார்கள் அனுபூதிமான்கள் இருந்தார்கள். இங்கே மெய்ப்பொருள் நாயனர் மன்னனுக இருந்தவர். அறிவுச் சூழலில் வாழ்ந்தவர். எதையும் தீர்க்கமாகக் கண்டு அறியக்கூடிய ஆற்றல் வாய்ந்தவராக இருந்தவர். அவருடைய வாழ்க்கையில் மன்னனுக இருந்தவர். மகிழ்ச்சியோடுதான் இருந்தார்.

கண்ணப்பன் அறிவிலே மிகப் பூச்சியமானவன். வாழ்ந்த சூழல் வேடவச் சூழல் அவனுக்கு இறைவனைப்பற்றி எந்தவிதமான சிந்தனைத் தெளிவும் இல்லை. ஆனுல் அவனுடைய அன்பு இந்த மூவரைவிட முற்றியிருந்தது. பழுத்து இருந்தது. அதனுலே அவன் இறைவனேடு அத்துவிதமானுன். இரண்டு பேரும் ஒன்ருகக் கலந்து விட்டார்கள்.

கண்ணப்பனைப் பாருங்கள் இறைவனுக்குப் பசிக்கிறது என்கிருர். எனக்குப் பசிக்கிறது என்பதால் இறைவனுக்கும் பசிக்கிறது என்ருன். அவனைப்போல் முட்டாள் யாரும் இல்லைப் பாருங்கள். எனக்கு பசிக்கிறது. இந்த நேரத்தில் என் அப்பனுக்குப் பசிக்கிறது என இறைச்சிதேடப் போகின்ருர் அதுபோல இரண்டறக் கலந்த நிலையில் சிவபெருமானும் கூட ஒரு கட்டத்தில் மனிதனுக மாறுகின்ருர். இவனுடைய கண்ணை முதலாவது இரத்தம் வந்தவுடனே கிளப்பி வைத்தானே ஒரு கண் அந்தக் கண்ணுலே பார்த்தவுடன் தானும் கண்ணப்பனுடைய அன்பு தெரிகிறது என்று ஓர் அறிஞர் கூறுகின்ருர். இந்த மனிதம் அந்த சிறுவனுக்குள் போனது இந்த சிவம் அந்த மனிதனுக்கு வந்தது. இதனுலே செயற்கரிய செய்கை செய்தவராக கண்ணப்பரையே நாங்கள் சொல்ல முடியும். இன்னும் ஒன்று சொல்ல முடியும். கண்ணப்பருடைய செயற்கரிய செயலை திருஞானசம்பந்தமூர்த்தி, அப்பர், பட்டினத்தார் இப்படி நாயன்மார்கள் வாழ்த்தியுள்ளார்கள். மாணிக்கவாசகர் சொன்னுர்

> 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை
> கண்டபின்'

கண்ணப்பனுக்கு இருந்த அன்பு எனக்கு இல்லை; நான் நாயாய் திரிந்தேன், பேயாய் திரிந்தேன் சாதாரணமான ஒரு பற்று இருந்தது. பாசம் இருந்ததே தவிர பரமேஸ்வரனிடத்தே எனக்கு கண்ணப்பனுக்கு நிகரான அன்பு இருக்கவில்லை. ஆனுல் அப்படிப்பட்ட தன்னையும் ஈர்த்து இழுத்தான் என்று பாடுகின்ருர்.

# கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை

ஏனைய நாயன்மார்கள் இடத்திலே இறைவன் கீழிறங்கிப் போனுன். ஆனுல் கண்ணப்ப நாயனுரை ஈர்த்தான். எந்த அன்பு பெரிது என்று கேட்டால் இந்த ஈர்த்த அன்பு பெரிதென்று சொல்வார்கள். மாணிக்கவாசகர் சொல்வார்.

> 'ஈர்த்தெம்மை ஆட்கொண்டே எந்தை
> பெருமானை,

சும்மா இருந்தவனை பன்றியை ஓடவிட்டு திருக்காளத்தி மலைவரை கொண்டு வந்து தன் னிருப்பிடத்திற்கு ஈர்த்த பெருமை இருக்கிறதே, அந்த பெரிய நிகழ்ச்சி இருக்கிறதே, அதுதான் செயற்கரிய செயலுக்கு முதல் கொடுத்த புள்ளி முதல் கொடுத்த மாக்ஸ் அதுதான் முதற்கொடுத்த சிறப்பு என்பதனை மறந்து விடக்கூடாது. அங்கே போனவுடனே மனத்திலே மாற்றம் ஏற்படுகின்றது. இங்கே இருப்பவன் எனது அப்பன் என்று சொல்லுகின்ருர். சிவன் என்று சொல்லவில்லை சைவ சித்தாந்தத்தில் சொல்வதுபோல அத்துவிதமாகின்ருன்.

புலவர், **ஈழத்துச் சிவானந்தன்**

> 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்புஇன்மை
> கண்டபின்

என்று திருவாசகத்திலே சொல்கின்ருர்.

செயற்கரும் செய்கை செய்தவர்களிலே இம் மூன்று நாயன்மார்களையும் விஞ்சி நிற்கின்ருர் கண்ணப்பர். ★

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல் முதலாக அருகில் நின்ற குமுதாவை பார்த்தான். அவன் என்ன சொல்லப் போகிருனே என்று ஆவலோடு அவனையே பார்த்தாள்.

''அம்மா இதுவரை கல்யாணத்தைப் பற்றி நினைக்கவேயில்லை. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற நினைப்பைத்தவிர வேறு நினைப்பே இல்லையம்மா. என் மீது நம்பிக்கையும், அன்பும் வைத்ததற்கு மிக்க நன்றி நான் வருகிறேன்'' என்று விடை பெற்றான்.

''கொஞ்சம் இருங்கள்'' என்றாள் குமுதா தாயிடம் இருந்த நகைப்பையை வாங்கினாள். ''இந்தாருங்கள் இதையும் கொண்டு போங்கள். இது எனக்கு இனி தேவைப்படாது. நான் வேறு எவரையும் கல்யாணம் செய்து கொள்ளப்போவதில்லை'' என்றாள் ஆணித்தரமாக.

விக்கித்துப் போய் மகளையே பார்த்தாள். அவள் கண்கள் பனித்தன. ''பாவிப்பெண்ணே இவ்வளவு அன்பா, இப்பையன் மேல் வைத்திருக்கிறாய்'' என்று அவள் உள்ளமும் மனமும் குமுறியது.

செய்வதறியாது அதிர்ச்சியடைந்த சுகுமார் குமுதாவையே பார்த்துக் கொண்டிருந்தான். ''இந்தப் பெண் இவ்வளவு 'அன்பு என்மீது வைத்திருக்குதே'' என்று எண்ணினான். திடீரென ஒரு முடிவுக்கு வந்தவன் போல் குமுதா அருகில் போய் ''அம்மாவின் காலில் விழுந்து கும்பிடு என்று சொல்லி தானும் அவளுடன் சேர்ந்து கொண்டான் 'அம்மா எங்களை ஆசீர்வதியுங்கம்மா என்றான்.

எழுந்தவன் ''நான் ஆஸ்பத்திரிக்குப் போய் வருகிறேன் எங்கள் கல்யாணம் நல்லூரில் முருகன் முன் நடக்கும்'' என்று குமுதாவைப் பார்த்துச் சொன்னான்.

''காக்க காக்க கனகவேள் காக்க'' என்று ஜானகி சஷ்டிகவசம் படித்தாள்.

★ ★

## ஞானக்கதிர்

ஞானம் உருவாய் அமைந்தான்
ஞாலம் முழுதும் அளந்தானை
தோன்றும் துன்பம் துடைப்பான்
தொடுத்த கருமம் முடிப்பானை
பானை வயிறு உடையானை
பந்த பாசம் கெடுப்பானை
யானை முகத்து வடிவானை
யாவரும் ஏத்தித் தொழுவோமே.

பிரணவப் பொருளே வடிவாவான்
பிள்ளை என்றே பெயராவான்
கயமுக அசுரன் குருவாவான்
காணும் மூன்று கண்ணுவான்
கணம் பலவுக்குத் தலையாவான்
கணபதி என்றே செயராவான்
கரமது ஐந்து உருவாவான்
கரணம் போட்டுத் தொழுவோமே.

வ. யோகானந்தசிவம்

## பாபா அருள் வாக்கு

எல்லையில்லாப் பெருங்கடல் சாந்தி. உலகை ஒளியில் ஆழ்த்துவதும் அதே. அதை உடையான் எல்லாம் உடையான். இவ்வுலக அவ்வுலக அறிவை அளிப்பது அது. பிரமத்தைப்பற்றிய அறிவை நல்குவது அது. மனித வாழ்வின் பயன் இவ்வறிவே. வேதாந்தம் உணர்த்துவதும் அஃதே.

★ ★

# சோதிடமும் விஞ்ஞானமும்

விஞ்ஞானிகள் பல உண்மைகளை அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். புதிதாக தாம் அவற்றைக் கண்டு கொண்டதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவையனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எம் மெஞ்ஞானிகளால் சொல்லப்பட்டவைகள் என்பதை ஏனோ அவர்கள் சொல்லிக்கொள்வதில்லை.

**கிரிலியன் கமரா**

மனிதர்களின் உணர்ச்சிகள் அலைவடிவங்களாக வெளிபட்டு சக்திவளையமாக (energy band) அவர்களை வியாபித்துள்ளது. இந்த அலைகள் பல வர்ணங்களில் வெளிப்படுகின்றன. அந்த வர்ணங்களைக் கொண்டு அவர்களின் குண இயல்புகளைக் கண்டு கொள்ள முடியும். இவ்வாறான ஒரு உண்மை இன்று விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்ணங்களைக் கொண்டு, அவர்களின் குண இயல்புகளை அறிந்து கொள்வதற்காக கிரிலியன் என்ற ரஷ்ய விஞ்ஞானியால் சக்தி வாய்ந்த கமரா ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கிரிலியன் கமரா என்பது அதன் பெயர்.

பிரான்ஸ்கோ பரணங்கி என்ற அமெரிக்க விஞ்ஞானி உலகின் பல பெரிய பிரமுகர்களையெல்லாம் இதன்மூலம் ஆராய்ந்து

நீலநிறம்:- ஆழமான ஞான மார்க்கம்

பச்சைநிறம்:- மக்களின் பிணி தீர்க்கும் பரேபகாரம்.

மஞ்சள்நிறம:- நுண் அறிவு.

வெள்ளைநிறம்;- ஆற்றல் அதிகம்.

கரும்சிவப்பு: துரோகம், கோபம் மோகம், ஏமாற்றம்.

இவ்வாறு அவர் சொல்கின்றார்.

இதற்கும் மெய்ஞானத்திற்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறீர்களா?

மனிதன் குண இயல்புகளுக்கு அவனவன் பிறந்த நேரத்தில் இருந்த கிரகங்களின் அமைப்புக்களே காரணம். இக் கிரகங்களின் தாக்கங்கள் ஒளி அலைகளாகவே அவனை வந்து அடைகின்றன என்று கூறிய மெஞ்ஞானிகள் ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு நிறங்களைக் கூறிச் சென்றுள்ளனர்.

**கற்கோவளன்**
(துளபகிரி சோதிடர்)

மனிதனுக்கு உலக வாழ்க்கைப் பற்றை நீக்குவதற்காக அளவில்லாத செல்வத்தையோ அல்லது அளவற்ற கஸ்ட்டத்தையோ கொடுத்து அவனை ஞானியாக மாற்றும் ஈஸ்வரன் என்ற பெயர் கொண்ட சனீஸ்வரனுக்கு உரியநிறம் நீலம்.

மக்களின் பிணிதீர்க்கும் நுட்பத்தைக் கொண்ட தொழில்களுக்கு அதிபதியான புதனின் நிறம் பச்சை.

அறிவுக்குரிய கிரகமெனப் போற்றப்படும் வியாழபகவானுக்கு உரிய நிறம் மஞ்சள்!

ஆற்றல் அதிகம் கொண்ட வெள்ளிபகவானுக்கு உரிய நிறம் வெள்ளை.

பழிவாங்கல், துரோகம், கோபம் இவற்றுக்குரிய கிரகமெனக் கொள்ளப்படும் செவ்வாய்குரிய நிறம் கரும்சிவப்பு.

இதனையே அன்று மெஞ்ஞானிகள் சொன்னார்கள் அதை நாம் பொருட்படுத்தவில்லை. இன்று விஞ்ஞானிகள் சொல்கின்றார்கள் மறுப்பின்றி ஏற்றுக் கொள்கின்றோம்.

★ ★

தசரதகுமாரன் தாசரதி, சக்கரவர்த்தித் திருமகன் அவனே. சக்கரவர்த்தித் திருமகனுர் (இராமபிரான்) திருவவதாரஞ் செய்தமையால் வானர இனமே வீறு பெற்றது. அவ்வாறே ஆழ்வார்கள் திரு அவதாரஞ் செய்த பின்பு, பட்சி சாதிகள் வீறு பெற்றன என்பது வைணவ உரை விளக்கம். இராமபிரான் உடைய தூதுவனுய் சொல்லின் செல்வனும் ஹநுமான் அமைந்தது போல, ஆழ்வார்கள் அஞ்சிறைப்புட்களே, ஸ்ரீமந்நாராயணக்கு-ஆழியானுக்கு தூது விட்டமையாய் அருளிப் போந்த பாசுரங்கள் பல உள. இப் பொருண்மை விளக்கும் பாசுரம் இதோ.

முன்னோர்தூது வானரத்தின் வாயில்
மொழிந்து, அரக்கன்
மன்னூர்தன்னை வாளியினுல் மாளமுனிந்து
அவனே
பின்னோர் தூதனுகி மன்னர்க் காகிப்
பெருநிலத்தார்
இன்னூர் தூதனென நின்ருன் எவ்வுள்
கிடந்தானே
பெரியதிருமொழி 2: 2: 3

விபிஷணனேயும் தசரதன் புதல்வராக்கிய பாவம் மிக உயர்ந்து காணப்படுகிறது கம்பன் வாக்கிலே. ஜானகியோடும், இளைய பெருமாளோடும் கானகஞ் சென்றபோது கங்கா தீரத்திலே முதற்கண்டது குகனேத்தான். கண்டதும் எடுத்த எடுப்பிலே வைதேகியையும் - தம்பி இலட்சுமணனேயும் அறிமுகம் செய்து அவர்களே அண்ணியாகவும் - தம்பியாகவும் பிரதிபாதித்த காட்சி மிக அற்புதமானது. இதிலேலயித்துப் போன திருமங்கையாழ்வார் இப்படியருளிப்போந்தார்.

"ஏழை ஏதலன் கீழ்மகன் என்னு
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து
'மாழை மான் மட நோக்கியுன் தோழி,
உம்பி எம்பி' என்றெழிந்திலே, உகந்து
'தோழ னீமெனக் கிங்கொழி' என்ற
சொற்கள் வந்தடியேன் மனந்திருந்
திட,
அழி வண்ண! நின் அடியினே யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத் தம்
மானே"
பெரிய திருமொழி 2: 8: 1

# 'ஒண்பொருள் எனக்கும் ஆதல் வேண்டும்..'

முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்தது போல ஆழ்வார்களும் பறவைகளேப் பகவானிடம் தூது கொண்டனர். இத் தூதுமரபு காவியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் இடம் பெற்றுத் தனியாகத் தூதுப் பிரபந்தங்களாயும் பிற்காலத்தில் மலர்ந்தன இச் சம்பவங்களேத் திருநாலாயிரத்து பரக்கக் காணலாம். இது ஒரு புறமாக, இராம காதையிலேயே ஆழங்காற்பட்டுப் பாடிய பாசுரங்கள், தாயான தன்மையினின் றெழுந்தவை எனப் பல்வகைப் பாசுரங்களும், படிப்போருள்ளத்தைக் கொள்ளே கொள்கின்றன அங்கே.

கம்பன் வழங்கிய இராமாயணச் சாயல்களேயும் ஆழ்வார்கள் எடுத்தாண்டிருக்கிருர்கள். இராமச்சந்திரமூர்த்தி கங்கை வேடனேயும், கிட்கிந்தை சுக்கிரீவனேயும், இலங்கை

கோயில் எனப் போற்றப்படும் திருவரங்கம் தொடர்பாய் வந்த திருமொழி இது கங்கை வேடனே, குலத்தால் ஓடம் ஒட்டுபவன் என்றெண்ணுது - சக்கரவர்த்தித் திருமகன் போற்றியவாறே என்னேயும் ஆட்கொண்டருளுங்கள் என வேண்டுகிறது இப்பாசுரம் இவ் வண்ணமேசிறிய திருவடியை (ராமபக்த அனுமானே) ஆதரித்துத் தன்னுடையவனுக்கிய வரலாற்றை கருது கோளாக வைத்துக் கொண்டு சரண்புகுகிருர் மங்கை மன்னன் அடுத்த பாசுரத்தில்.

முருகவே பரமநாதன்

"வாத மாமகன் மர்க்கடம் விலங்கு
மற்றோர் சாதியென்றெழிந்திலே, உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
செய்த தகவினுக் கில்லேகை
மாறென்று,
(32 ஆம் பக்கம் பார்க்க)

## உயிர் வளர்க்கும் உபாயம் சொன்ன

# மூவாயிரந்தமிழ்

ஞானத் தலைவனை —அறிவே உருவமான இறைவனை - சிவனை, மெல்ல மெல்லச் சேர்வதற்கு— சிவத்தோடு ஐக்கியப்படுவதற்கு ஒருவழி சொல்லப்படுகிறது. மூலன் செய்த மூவாயிரந் தமிழை ஓதி உணர்தல் அந்த வழி. திருமந்திரம் ஒன்றே தமிழ் என்ற சிறப்புப் பெயர் பெறுகிறது. தமிழ் என்றால் அன்பு. தமிழ் என்பதற்கு இனிமை என்பதும் ஒரு பொருள். மூலர் செய்த மூவாயிரந்தமிழ், செந்தமிழ் -பைத்தமிழ்ச் சுவைக்கு அப்பாற்பட்டது; அகன்றது; ஆழமானது. மூலர் தமிழ் மூத்த இனிமையது; முதிர்ந்த இனிமை. ஞானத் தலைவரை நண்ணும் இனிமை, பேரின்பப் பெருங்கடலில் நீந்தும் இனிமை, சிற்றின்பத்தையே பேரின்பமாக நுகர வைக்கும் —வளரவைக்கும் இனிமை.

'...என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.'

நன்றாகத் தமிழ் செய்ய -அன்பு செய்யப் படைக்கப்பட்ட மூலர் 'தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' எனத் தமிழ் செய்த - தமிழ் மந்திரஞ் செய்த—திருமந்திரஞ் செய்த—ஞானி தன் பின் வந்த தாயுமானவர்க்கே அடியெடுத்துக் கொடுத்த பேரன்பர்.

'தேவர் குறளும்...திரு
மூலர் சொல்லும்
ஒரு வாசகமென்றுணர்'

என்று ஔவைப் பிராட்டியால் முத்திரையிடப்பட்டது மூவாயிரந்தமிழ். திருமந்திரம் செந்தமிழ் வேதம். இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் தத்துவங்கள் நிறைந்தவை. திருமூலரின் ஆன்ம உணர்வின் முதிர்ச்சி சிவசமயத்தின் தமிழ் ஆகமம் -ஆன்மகோடிகள் இன்புறுவதற்காக - அன்பு செய்வதற்காக அருளிப்போந்தவை. நீண்டகாலமாகத் தான்பெற்ற சிவானுபூதியை - வையகம் வாழவென வெளிக்கொணர்ந்த மூவாயிரம் முத்து. சீவன் முத்தராகச் சிந்திய முத்து. சீவாத்மா பரமாத்வாவுடன் நெருங்கிய நிலையின் வெளிப்பாடு.

ச. கதிரவேலு B.A.

சீவாத்மா பரமாத்மாவைக் கண்டு உணர்ந்து, அறிந்து அனுபவித்து ஐக்கியப்படும். சீவன் சிவத்தைக்கண்டு சிவத்தை அனுபவிக்கும். அன்பு செய்யப்பட்ட சீவன் சிவமாக வளர்கிறது. அன்பே சிவமாகிறது. இந்த அனுபவமே சிவாநுபவம் – சிவானுபூதி சிவபோகத்திற்கு அந்மில்லை சிவபோகத்தில் ஆழ்ந்து அமிழ்ந்தி இன்புற, தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறத் தமிழ் செய்தார் திருமூலர்.

சீவன் சிவமாதலே வேதாந்தசித்தாந்தம், சிவம் சீவனை என்றும் பிரிந்திருப்பதில்லை, சிவம் சீவனைப் பிரிந்தால் சிவம் சீவனாய் இருக்கமாட்டா சிவம் சீவனைப் பிரிந்தால் சீவன் சீவனாகவுமில்லை. சீவன் உடலைப்பிரிந்தால் உடல் வெறும்சடம். உடம்பை விட்டு உயிர் பிரிந்தால் மெய்ஞானம் பெறற்கரியது. சிவத்தைச்சேர – சிவத்தை அறிய சீவனை வளர்க்க வேண்டியுள்ளது. உடல் நிலைப்பதற்கும் இயங்குவதற்கும் ஆதாரம் உயிர். உயிர் நிலைப்பதற்கும் இயங்குவதற்கும் ஆதாரம் சிவம். உடலின் ஒவ்வோர் அணுவிலும் உயிரின் வியாபகம். உயிரின் ஒவ்வொரு கூற்றிலும் சிவத்தின் பரவல். உடம்பில் வியாபகமாய் இருக்கும் சிவத்தையும் காணமுடிவதில்லை. உணரமுடிகிறது. அனுபவிக்க முடிகிறது. சிவத்தின் வியாபகநிலை வளர்ச்சி அடைகிறது. சீவனுக்கும் – சிவனுக்குமுள்ள வியாபகம் – ஐக்கியம், எந்தளவுக்கு வளர்ச்சிஅடைகிறதோ அந்த அளவுக்குச் சிவானுபோகம் பெருகிறது. இன்பம் பெருகுகிறது. பேரின்பமாக வளர்ச்சி அடைகிறது. சிற்றின்பம் பேரின்பமாக மாற்றமடைகிறது. சிவத்தைச் சேர, சிவத்தைச் அறிய உயிரை வளர். உயிர் வளர உடம்பை வளர். பிறந்த பிறப்பிலேயே மெய்ஞானத்தை நுகர். அப்போதுதான் உயிர்பெறவேண்டிய பயனைப் பெறமுடியும் அது தானே பிறப்பின் பயன்—வாழ்க்கை குறிக்கோள். என்று அன்பு செய்வது திருமந்திரம்.

# இறைவன்

கண்ணில் கரு மணியாகி
கருத்தில் ஒளியாகி
பண்ணில் இசையாகப்
படித்திருப்பான் இறைவன்......!

அருளைப் பொழிந்து நல்
ஆற்றலைத் தந்து
கருவில் உருப் போல - நம்மில்
கலந்திருப்பான் இறைவன்..... !

அரிசியில் கல் போல்
அகத்தின் துயர் தனை,
எரித்தே இன்பதீபத்தை
ஏற்றிடுவான் இறைவன் .... !

தனக்கு நிகர் இல்லாது
தானே தனித் தலைவனாகி
தினமணிக் கதிர் போல் எங்கும்
திகழ்ந்திருப்பான் இறைவன்......!

பெற்று வளர்த்து நம்மைப்
பேணிக் காப்பவர் போல
உற்ற துயர் வந்த போது
உடன் காப்பான் இறைவன்......!

உஷா

# உயிர் வளர்க்கும் ....

'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே.
(திருமூலர்)

புலன் நுகர்வுகளை அடக்குவதென்பது இலகுவானதன்று அவற்றோடு கூடியிருந்தே அவை பெற்ற பயனை அடையவேண்டும். உலக இன்பங்களை நெறிப்பட்ட முறையில் துய்த்துக் கொண்டே பேரின்பம் பெறமுடியும்.

''அஞ்சும் அடக்கடக்கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை...''
(திருமூலர்)

இந்தவகையில்

பேரின்பத்தை அளிக்கும் வகையில் உயிர்க்கு இனிமையானவை எல்லாவற்றிலும் இனிமையானவராக இறைவன் காணப்படுகிறார்.

அன்பு செய்வாரைச் சிவன் அறியவைக்கும் நெறி தோத்திரம், சாத்திரம், வாழ்க்கை மூன்றையும் கூறும் நூல்கள் சில. திருக்குறள் அறம் பொருள் இன்பம் மூன்றும் பகர்வது. திருமந்திரம் அறம் பொருள், இன்பம் வீடு நுவல்வது. திருவாசகம் தோத்திரத்தில் சாத்திரம், திருமந்திரம் சாத்திரத்தில் தோத்திரம்.

# வேத விஞ்ஞானம்

உலகின் பல மொழிகளிலுமுள்ள இலக்கியங்களுள் காலத்தால் முந்தியவை எனக் கருதப்படுபவை வடமொழியிலான வேதங்கள். இவற்றை நாம் சமய நூல்களென்றே கருதுகின்றோம். சுருங்கக்கூறின் இவைகள் சமய நூல்கள் மட்டுமல்ல, அறிவு நூல்களாகும். வேதம் என்ற சொல்லே அறிவு என்பதையே குறிப்பிடுகின்றது. வேதங்களில் காணப்படாத விஷயங்களே இல்லை என்பது அறிஞர்கூற்று. வேதங்களில் கூறப்பட்ட அறிவியல் உண்மைகள் கணக்கிலடங்கா. அவற்றில் எதையும் மறுத்துக் கூறியவர்களும் இல்லை எனலாம். வேதங்களோ, அவற்றின் துணைநூல்களோ விஞ்ஞானத்தைப் புறக்கணிக்கவில்லை. மேலாக, வேதங்களே விஞ்ஞானத்தைக் குறைவிலாது நிறைவாக வெளிப்படுத்தி வருகின்றன. அவற்றை முறையாகப் பயின்று ஆய்ந்தாலே இதன் முழுநிலையையும் ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

விஞ்ஞானத்திற்குரிய ''அவதானித்தல்'' ''ஊகித்தல்'' என்ற இரு செயற்பாடுகளையும் எமது வேதங்களைத் தொகுத்த முனிவர்கள் கடைப்பிடித்து அதன் மூலம் இயற்கையில் உள்ள ஒழுங்கமைப்பினையும் அவ்வமைப்புகளால் நாம் பெறக்கூடிய நன்மைகளையும் அறிந்து, அவற்றை அடைவதற்கு, இயற்கைக்கு எவ்வித விரோதமும் இடர்ப்பாடுமின்றி நாம் எவ்விதம் செயல்பட வேண்டுமென்பதையும் அவதானித்து பெறுபேறுகளை அலசி ஆராய்ந்து கண்டு மகிழ்ந்து எமக்கு வழிகாட்டியுள்ளனர். இவைகளையே 'ஸ்மிருதிகள்' என்றும் சாஸ்திர நூல்கள் என்று கூறுவர். உண்மை நிலையை இம்முனிவர்கள் கண்டறிந்ததாலேயே இவர்களை (Seers) என, (அதாவது Those who saw thro the natural order of things in the universe) அழைத்தனர். ''ரிதம்'' எனப்படும் இயற்கை ஒழுங்கைப் பின்பற்றியவர்களாகையால் வடமொழியில் ரிஷிகள் என இவர்களுக்குப் பெயர்.

வேதகால வாழ்க்கையும் நியதிகளும் ஏதோ குறைபாடுகளுள்ளவைகள் எனக் கருதுவது சரியல்ல. வேதங்களில் காணப்படும் விஷயங்கள் மனிதனது சீரிய வாழ்க்கைக்குரிய அனைத்தையும் கொண்டவை இவற்றை விளக்கிக் கூறும் நூல்களே 'சாஸ்திரங்கள்'. அறிவியல் (Science) எனப்படுவது இதுவே. வேதத்தின் உட்பொருள் விளக்கங்களை வேத விஞ்ஞானம் என சம்ஸ்கிருத அறிஞர் கூறுவர். வேதவிஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்டு எந்த விஞ்ஞான நுட்பமும் இருக்கமுடியாது எனத் துணிந்து கூறுவோரும் உளர்.

விசுவாமித்திர முனிவர் தன் தவவலிமையால் இருந்த இடத்திலிருந்து தொலைவில் ஒரு செயற்பாட்டை நிகழ்த்தினர். இது இன்றைய 'Remote control' தவிர வேறொன்றுமில்லை. திரிசங்கு என்ற சூரியவம்சத்தரசன் சொர்க்கம் செல்லவிரும்பி ஆபத்தை நோக்கிய பொழுது அவனுக்கென விண்வெளியில் விசேஷமான சுகவாசஸ்தலத்தை அமைத்துக்கொடுத்தார். இது விண்வெளியில் அவர் படைத்த Sattelite என்று கருதவேண்டும்.

பூமிக்கடியில் நிறைந்த அளவில் பரவிக் கிடக்கும் பாதரஸப்படிவங்கள் பூகம்பம் உண்டாவதற்கான முக்கியமான காரணிகளில் ஒன்று என விஞ்ஞான உலகம் இனித்தான் ஏற்றுக்கொள்ளப் போகிறது. அணுசக்தியும், அணுவைப் பற்றியும் அதிகமாக அறிந்து கொள்ள எம்விஞ்ஞானிகள் வேத இலக்கியங்களையும் ஆராய்ந்து பயன்பெறுவார்களாக.

செ. ந நடராஜன்

இராமயணத்திலும் மஹாபாரதத்திலும், மற்றும் புராணங்களிலும் குறிப்பிடப்படும் போர் நெறிகளும், அஸ்திரங்களும் ஆயுதங்களும், இன்றைய ஏவுகணைகளையும் (Missiles) லேசர் கதிர்கள் (Laser Beams) போன்றவற்றையும் நினைவுறுத்தும். விண்வெளி ஆராய்ச்சிக்கும் வேத விஞ்ஞானம் மிகவும் பயனுள்ளதாகும். ஒலியின் அளவைக் குறிக்கும் சொல் அதிர்வுமானம் (Frequency) எனப்படும். இத்தகைய ஒலியினை, அதாவது மந்திரம் என்ற சிறப்புப் பெயருடன் அட்சரத் தொடர்புடன் நெறிப்படுத்தி ஒலிக்கச் செய்து ஏவப்பட்ட ''ஏவுகணைகளை'' எம்புராண இதிகாசங்கள் ஏராளமாகக் குறிப்பிடுகின்றன.

அகஸ்தியர் ''ஆதித்யஹ்ருதயம்'' என்ற மந்திரசக்தி வாய்ந்த துதியை இராமபிரானுக்கு உபதேசித்து யுத்தத்தில் வெல்லும் ஆற்றலைப் பெறச்செய்தார் என்பது நாம் அறிந்ததே.

''அணுயுகம்'' என நாம் பெருமையாகக் கூறிக்கொள்ளும் இன்று எல்லா நாடுகளையும் எதிர்நோக்கியிருப்பது மக்கள் தொகைப்பெருக்கம் ஆகும் இதையிட்டு குடும்பக்கட்டுப்பாடு இயக்கம் (Movement for family planning) தோன்றி ஏராளமான பணச்செலவில் இயற்கையை மீறிய செயல்களையெல்லாம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுபற்றிய வேதவிஞ்ஞானம் என்ன கூறுகின்றது என ஆராய்வாம்.

## மகளிர் நிலை

'உயிர்களின் படைப்பு' என்னும் செயற்பாடு வல்லவனாகிய 'வாலறிவன்' வகுத்தபடி ஆண், பெண் இருபாலாரினது இணைவு கொண்டே நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. இடைவிடாது நடைபெறும் போராட்டங்களுக்கிடையில், இயற்கையானதும் அத்தியாவசியமான இசைவும் (Natural and essential Harmony) உடையதாக வாழ்க்கை என்னும் நாடகம் இந்த இணைவிலேயே தங்கியிருக்கிறது. ஒரு ஸ்திரீயானவள் மனிதனுடைய உணர்வுகளைத் தூண்டுபவள், அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமானவள் என்று எண்ணி வந்த காலம் உண்டு. அது வெறும் கற்பனையே. வேதங்களே மகளிரை மிகவும் போற்றி உன்னத நிலையில் வைத்துப் பேசுகிறது. வேதப்பாடல்களில் சிலவற்றைத் தொகுத்தவர்கள் மகளிர் என்றால் ஆச்சரியம் அடையவேண்டாம்.

ஆனால் மேலைநாடுகளில் நிலைவேறு. கவிதைகளிலும், பலதரப்பட்ட இலக்கியங்களிலும் பெண்ணினத்தைப்பற்றி வரம்புமீறிய, பயங்கரமான அளவிற்கு, பாலியல் தொடர்பிலேயே சித்தரித்திருக்கக் காணலாம். (Sex obsessed literature)

தொன்மையான இந்திய இலக்கியங்களில் பாலியலுணர்வுக்கு மிகவும் புனிதத்தன்மை தரப்பட்டு இருப்பதைக் காட்ட சான்றுகள் நிரம்ப உண்டு. அத்தகைய அம்சங்கள் எம்மவர் கண்ணிலும் மனத்திலும் படியாதவொன்றாக ஆகிவிட்டது வருந்தற்குரியது. வேதத்தின் தொடர்புள்ள சில கட்டுப்பாடுகள் பாலியலின் புனிதத் தன்மையை உணர்வதற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. நீதிசாஸ்திரம் எழுதிய 'மநு' வின் கருத்துப்படி பாலியல் காரணமாக, விபரீதங்களும், ஆபத்துக்களும் ஏற்படும் என்பது ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதே. எனினும் எங்கும் எதிலும், தீமையையும் ஆபத்தையுமே நோக்காமல், ஒழுக்கம், நேர்மை, கட்டுப்பாடு என்பனவற்றின் அடிப்படையில் வாழ்க்கையை நடத்தினால் எல்லாவிதமான இடர்ப்பாடுகளையும் கடந்து முன்னேறமுடியும்.

மகளிருக்கு சமூகத்தில் இரு பொறுப்புகள் உண்டு. ஒன்று இல்லத்தரசியாயிருத்தல், மற்றொன்று 'தாய்' என்பது 'தாய்' என்பது இவ்விரண்டினுள் மிகவும் பெருமையையும் உயர்வையும் பிரதிபலிக்கின்றது. 'மநு' என்பவரின் கூற்றுப்படி, ஆசானைவிட தந்தை ஆயிரம் மடங்கு மரியாதைக்குரியவர். 'தந்தையைவிட தாய் ஆயிரம் மடங்கு மரியாதைக்குரியவள்'. தைத்திரீய உபநிஷதம் மாணவனுக்குரிய அநுசாஸனத்தில் ('மாத்ரு தேவோபவ') 'அன்னையைத் தெய்வமாகக் கொள்' என முதலில் குறிப்பிடுகிறது. இவையெல்லாம் குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்கு ஆதாரமாகக் கூறப்பட்டவை. ,அன்னை', 'தாய்' என்ற சொற்கள் பூரணத்துவம் நிறைந்ததோடு புனிதமானவையுமாகும்.

'கருணையின் வடிவமே தாய்' (Mother is Compossion Incarnate) என்பர் அறிஞர். எல்லையில்லாத அன்புக்கும் மரியாதை செலுத்துவதற்கும் நிலையிடம் எனத் தாயை வருணிப்பதுண்டு. தாயிடம் மட்டும் தான் தன்னலம் கருதாது அன்பு செலுத்தும் உயரிய பண்பு காணப்படுகின்றது. அவளது பரிவும் மன்னிக்கும் பண்பும் முடிந்து போகாது எப்பொழுதும் நீடிக்கும் தன்மையது. துன்பத்தைத் தாங்கிக் கொள்வதும் தியாகமும் தாயிடமிருந்து இயல்பாக வெளிவரும் குணங்கள். மகளிர் தாய்மைக்குரியவர்களாகையால், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அந்த உயரிய நிலையையொட்டி தங்களிடமுள்ள தெய்வீக சக்தியை உணர்ந்து அதைத் தங்கள் குழந்தைகளிடத்தில் அன்பு, பரிவு, தியாகம் என்று பலவகைகளிலும் செலுத்துகிறார்கள். இந்தச் சூழ் நிலையை அடிப்படையாக வைத்தே குழந்தையைப் பெறத்தகுதியற்ற ஒரு பெண் 'மலடி' என்ற இழி சொல்லால் அழைக்கப்பட்டு சமூகத்தில் ஒதுக்கித் தள்ளப்பட்டவளாகக் கணிக்கப்படுகிறாள். மகளிர் இத்தகையதொரு நிலை தங்களுக்கு ஏற்பட்டால் அதை ஒரு சாபக்கேடு என்றே கருதுவதைக் காண்கிறோம். ஏனெனில் அவர்களிடமுள்ள தெய்வீக சக்தியை உணர்ந்து செயல்பட வாய்ப்பில்லாது போய் விடுகிறது அல்லவா?

(தொடரும்)





# நாம் ஓர் அடி வைத்தால் பத்தடி எம்மை நோக்கி வருவான்

பிரார்த்தனை எல்லா மதங்களிலும் இறைவனை அடையும் முக்கியமான சாதனை மார்க்கமாக அமைந்துள்ளது. உணவு நமது ஸ்தூல சரீரத்துக்கு புஷ்டியைக் கொடுப்பது போல பிரார்த்தனையும், வழிபாடும் நமது மனத்துக்கு வலுவூட்டுவதுடன் ஆத்ம விழிப்பையும் ஏற்படுத்துகின்றன. மேலும் பிரார்த்தனை நமது மனத்தின் அழுக்குகளை அகற்றி இறைவன் குடிகொள்ளும் ஆலயமாக மாற்றுகிறது.

'பக்தனின் இதயம் பகவானின் உறைவிடம்'
'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'
'காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக'
'மனத்தகத்தான் வாக்கிலுள்ளான்'

—என்று இறைவனின் அடியார்கள் பாடிப் பரவியுள்ளனர்.

இறைவனுடைய கருணை அனைவருக்கும் பொதுவானது. காற்று சமமாக எல்லா இடங்களிலும் வீசுகிறது. பாயை விரித்து வீசும் காற்றை பயன்படுத்தும் ஓடக்காரன் ஆற்றை சுலபமாகத் தாண்டுகிறான். அது போல இறைவனின் கருணையாகிய காற்று எல்லாரிடத்தும் சமமாகவே வீசுகிறது. எவனொருவன் தன் இதயத்தைத் திறந்து முழு நம்பிக்கையுடன் இறைவனிடத்துப் பிரார்த்திக்கின்றானோ அவன் இறைவனின் கருணையாகிய காற்றைப் பயன்படுத்தி பிறப்பு இறப்பு என்னும் பிறவிப் பெருங்கடலையே தாண்டி விடுகின்றான்.

நாம் இறைவனை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் இறைவன் நம்மை நோக்கி பத்து அடிகள் எடுத்து வைப்பான். நாம் உலகில் காணுகின்ற அன்பு, கருணை நட்பு ஆகிய இனிய குணங்களுக்கெல்லாம் பிறப்பிடம் இறைவனை தாயிற் சிறந்த தயாவான தத்துவனே- அம்மையே அப்பா ஒப்பிலா மணியே - என்று நாயன்மார்கள் இறையின்பத்தை அனுபவித்துப் பாடியுள்ளார்கள்.

## பிரார்த்தனைக்கு செவி கொடுக்கும் இறைவன்

மனித உடலை மையமாகக் கொண்டு தான் ஆலயங்களைக் கட்டினார்கள். அரசன் கட்டிய வானளாவிய ஆலயத்தையும் விட பூசலார் நாயனார் மனத்தில் எழுப்பிய ஆலயத்தையே இறைவன் பெரிதும் விரும்பினான்.

மனம் கசிந்துருகிச் செய்யும் தூய பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்க்கிறான். சிரத்தையோடு கூடிய பிரார்த்தனை மனம், வாக்கு, உடல் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையாக்குகின்றது என்பது ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் திருவாக்காகும்.

ஓர் அறை வருஷக்கணக்காக இருளில் மூழ்கிக் கிடக்கலாம். ஆனால் அந்த அறையில் விளக்கை ஏற்றிய அந்தக் கணத்திலேயே இருள் அகன்று ஒளி உண்டாகிறது. அது போல நாம் பல பிறவிகளில் எண்ணற்ற தீய கர்மங்களைச் செய்திருந்தாலும் இறைவனிடத்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினால் நமது மருள் நீங்கி அருள் உண்டாகும்.

**சுவாமி அஜிராத்மானந்தா**

நாம் இறைவனை நோக்கி ஒரு அடியைத் தானும் எடுத்து வைக்கும் முயற்சியைச் செய்ய வேண்டும்.

**நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர்சங் கரன்.**

என்கிறது திருவருட்பயன்.

இறைவன் எந்தவிதமான விருப்பு வெறுப்போ, சலனமோ இல்லாதவன். தன்னை அண்டியவர்க்கு அளவில்லாத நன்மையே செய்பவன். அதனால் அவன் 'சலமிலன் சங்கரன்' எனப்பட்டான்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில்: Morphia, Pethidine என்பவை மார்புவலி புற்றுநோய் போன்ற பயங்கர நோய்களினாலும், உடல் உபாதைகளினாலும் துன்புறும் நோயாளிகளுக்கு, மிகக்குறைந்த அளவில், அதுவும் அவசியம் ஏற்பட்டால் மட்டுமே அளிக்கப்படுகின்றது. இதனால் அவர்களுக்கு எந்தவித தீமையும் இல்லை. நீங்கள் நினைப்பதுபோல, அவர்கள் தொடர்ந்து இதைப் பாவிக்க மனம் தூண்டப்படுவது மிகவும் குறைவு. அத்துடன் டாக்டர்களின் அனுமதியில்லாமல், வெளியிடங்களில் இவற்றைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது. ஆனாலும் ஆஸ்பத்திரியில் இந்த ஊசிமருந்துகளுடன் தாராளமாகப் பழகும் சில டாக்டர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் இந்தப் பழக்கத்துக்கு அடிமையாகி, இந்த ஊசிமருந்துகளை களவாகத் தமக்குத் தாமே போட்டுக்கொள்ளுவார்கள்.

10. கேள்வி: இந்த Drug Addicts ஐ எப்படி இனம் கண்டுகொள்ளலாம்?

பதில்: டாக்டர்களுக்கு அவர்களது உடலில் ஊசிமூலம் போதைமருந்தேற்றிய அடையாளங்களோ, தொற்றுநீக்காத, அதாவது அவிக்காத (Unsterilized) ஊசியினால் குத்தியதால் கிருமித்தொற்று ஏற்பட்ட சீழ்கட்டிகளோ புகைமூலம் போதைமருந்தினை (inhale) உள்ளுக்கு சுவாசித்த அடையாளங்களோ, அதாவது முகம் கறுப்படைந்து, கைவிரல்களும் புகைபடிந்து, நிறம்குறைந்து, உள்ளங்கைகளில் ஈயத்தின் நச்சுத்தன்மையைப் பறைசாற்றும் புள்ளிகளோ காணப்படும் - அத்துடன் போதிய உணவின்மையால் ஏற்படும் மெலிந்த போஷாக்கற்ற தோற்றம், கண்களில் அதாவது பார்வையில் ஒரு விரக்தி, ஒரு வெறுமை, கலந்திருத்தல், இவைகளைக் கொண்டு யாரும் இனம் காணலாம்.

11. கேள்வி: இதை ஒருவித மனநோய் என்று கூறலாமா?

பதில்: ஆம் இது ஒருவிதத்தில் மனநோய்தான். இதற்கு அடிமைப்பட்டவர்கள், போதைமருந்து இல்லாமல் வாழமுடியாத நிலையில் (Dependence) இருக்கும்போது, அதாவது Psychological Dependence – இது ஒருவித மனநோய் என்றும் கூறலாம்.

12. கேள்வி: நோயாளிகளிடமும் இந்தப் பாவனை இருப்பதாகக் கருதுகின்றார்கள். இது சரியான கருத்தா?

பதில்: வாழ்க்கையில் பல பிரச்சினைகளைச் சமாளிக்கமுடியாமல் மன உளைச்சலினால் மனநோயாளர் ஆகுபவர்கள் தாமாகவே எடுக்கும் தூக்கமாத்திரைக்கு (Luminal) சிலர் அடிமையாகின்றார்கள். அது இல்லாவிட்டால் தூக்கமே வராது என்ற நிலைக்குத் தள்ளப்படுவதற்கு இதனை ஒப்பிடலாம். ஆனால் ஒரு சில மனநோயாளர்கள்தான் இதனை பாவித்துள்ளனர். அவர்களுக்கு மனநோய்க்கான சிகிச்சை அளிக்கப்படும்போது தாமாகவே தூக்கமாத்திரையான Luminal ஐ கைவிட்டு விடுவர். அநேகமாக மனநோயாளர்களிடம் இது பாவனையில் இல்லை என்றுதான் கூறுவேன்.

13. கேள்வி: நம் இளம் சமுதாயம் இந்த நிலைக்குத் தள்ளப்படாமல் நாம் முயற்சிக்க வேண்டும். ஒருசில நிமிட சந்தோஷத்துக்காக அவர்கள் உயிரையே உருக்குலைய விடுவதா? இவர்கள் சென்றுகொண்டிருக்கும் அழிவுப் பாதையைத் திசைதிருப்பும் முக்கிய பொறுப்பு டாக்டர்கள் கையில்தான் உள்ளது என நினைக்கின்றேன்...

பதில்: பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அடுத்தபடியாகத்தான் டாக்டரின் பொறுப்பு... உள்ளது என்பது என் வாதம்.

14. கேள்வி: அப்படியானால் மனநோய் வைத்தியர் என்ற முறையில் இதை எப்படித் தடுக்கலாம் என்கிறீர்கள்?

பதில்: பெரிய கள்ளக்கடத்தல் முதலாளிமார், இதனைக் கடத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் இளைஞர்களைப் பழக்கி உள்ளனர் - இந்த இளைஞர்கள் அதனை வாங்கி விற்பதற்கு, அதன் தரத்தை அறிவதற்காகச் சுவைத்துப் பழகி, இதற்கு அடிமையாகியுள்ளார்கள். எனவே சமுதாயமே ஒருங்கு திரண்டு அரசாங்கத்தை அணுகி, போதை வஸ்துக் கடத்தல் தடைச்சட்டத்தை மிகவும் கொடுரமான தண்டனையாக வழங்கக்கூடியதாக அமுலுக்குக் கொண்டுவரச் செய்யவேண்டும். இதை அமுலாக்க வேண்டியதுதான் அவசரமானதும், அவசியமானதுமாகும்.

நன்றி.

# எம்மைக் காக்கும் காளி

அள்ளிக் கொடுப்பாள் அடியார் மிடிகள் அகன்றிடவே
துள்ளிக் குதிப்பாள் பகைவர் நடுங்கத் துடியடிப்பாள்
வெள்ளிப் பிரம்பை விசுக்குவாள் சூலத்தை வீசிநிற்பாள்
கள்ளக் கபடர் வெருண்டோடப் பத்திர காளிகையே.

(அட்டைப்பட விளக்கம்)

கழகப் புலவர் **பெ. பொ. சிவசேகரனார்**

---

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'கோதில் வாய்மையினாயொடு முடனே
உண்பன் நான்' என்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டுமென் றடியினை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத் தம்மானே.

பெரியதிருமொழி 2: 8. 2

வாதமாமகன் – வாயுகுமாரன், மர்க்கடம்- குரங்கு விலங்கு - மிருகம். சரணாகதிதத்துவத்தில் நின்று கவியன் அருளிய இப்பாசுரத்தின் தத்துவம் என்ன? ராமதூதனாகிய ஹநுமானை இராமன் ஆதரித்த பாங்கை மனதிற் பதித்து, அந்நெறியிலே தன்னையும் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சரண்புகுகிறார் இதில். ஆமாம். விலங்கென்ற எண்ணமேயின்றி " காதல் ஆதரம் கடலினும் பெருகச் செய்த தகவினுக்கில்லை கைமாறு " என்று ஒரு வரலாற்றையே முன் வைக்கிறார். விலங்கென்ற இழிவு பாராதே ஆட்கொண்டு, அதன் பக்கல் சிறப்பான கருணை செய்த செய்தியைக் கருத்தை இப் பாசுரத்தில் எடுத்துக் கூறி ஈடுபடுகின்றார் ஆழ்வார். அனுமானிடத்து எல்லையற்ற அருள் பாலித்தவாறே போல அடியேனிடத்தும் என் இழிவு பாராதே பேரருள் புரிய வேண்டும் என்ற பாவனையில் அமைந்தது இப் பாசுரம். கோதில் வாய்மையினாயொடுமுடன் உண்பன் நான்' என்றதன் உட்பொருளமைந்த கதையொள்று இதன் பின்னணியில் இருப்பதைக் இனிக்காண்போம்.

இராவணவதம் முடிந்து அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார் இராமபிரான் – சீதாபிராட்டி, இலட்சுமணன், ஹனுமான், விபீடணன் இவர்கள் சுற்றஞ்சூழ வருகிறார்கள். கங்கையும்யமுனையும் சங்கமமாகும் பிரயாகையில் பரத்துவாச முனிவருடைய ஆச்சிரமம் – இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு அங்கே விருந்து. இராமனுடைய வருகையை அறிவிப்பதற்காக இராமதூதன் பரதனை நோக்கிப் பறக்கிறான். அன்றேற்பரதன் நெருப்பிலே வீழ்ந்து விடுவானல்லவா. எனவே செய்தி சொல்லிவரக் காலதாமதமானது அன்று விருந்துக்கு ஆன ஆயித்தமாயிற்று, உண்ணவுந் தொடங்கி விட்டார்கள். அனுமான் ஆகாயத்திலிருந்து குதித்தானா. அவ்வளவு தபன் இலை போட்டு உணவு பரிமாற நேரமாகுமென்றெண்ணிய, சக இராமன் தன்னிலையிலேயே உண்பித்தான் ஹநுமானை. இந்த எக்க உண்ட செய்தி வாசிஷ்டராமாயணத்தில் உண்டு. முன்பெல்லாம் வாழை இலையில் தாமரை இலையில் உள்ளது போலவே இழை நரம்பு இல்லாதிருந்தது என்றும், இப்பொழுது இராமன் அனுமனை தன் எதிரில் அமரச் செய்து தன் இலையில் ஒரு பாதியிலே அவனுண்ணுமாறு அவ்விலை நடுவில் தன் கையால் ஒரு வரையளவு கீறினாக அது முதற் சங்கற்பத்தால் அவ்விலை இடைநரம்பு ஏற்பட்டதென்றும் கூறுவர். இது ஐதீகமாகும். கோதில் வாய்மையினாயொடும் உடன் உண்பன் என்றதிருவாக்கு எமக்கெல்லாம் அருள் வாக்கே. இப்படி 4000 செய்திகளை திவ்வியப் பிரபந்தத்திலே அருளினார்கள் ஆழ்வார்கள். அவர்களின் திவ்ய திருவடிகளே சரணம் கோதில் வாய்மையினான் – சொல்லின் செல்வன் ஹநுமான். சிந்தையாலுன் திருவடியடைந்தேனென்ற சுந்தரர் வாக்கும் இங்கே ஒப்பீடு செய்வதற்குரியது.

*

# அர்ச்சுன

கல்வி - முயற்சி - பெருவாழ்வு

## சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை
விருத்தி செய்ய விரும்புகிறீர்களா?
அவர்களின் அறிவுப் பசிக்கு பல்சுவை
விருந்து அளிக்க விரும்புகிறீர்களா?

உடனே

**'அர்ச்சுன'** வை வாங்கி

**மாதந் தோறும்**

**பரிசாக வழங்கவும்**

**விலை ரூபா 4/- மட்டுமே.**

ஆண்டுச் சந்தா ரூபா 55/- (தபால் செலவு உட்பட)

காசோலை / காசுக்கட்டளை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று எழுதி த. பெ. எண் 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.



இந்து சமய மாத மஞ்சரி ஞானக்கதிர் நியூ உதயன், பப்பிளிக்கேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் வெளியிடப்பட்டது.




## கூர்ந்து கவனியுங்கள்!

'ஷப்ரு'வின்

- ★ மாதாந்த சேமிப்புத் திட்டம்
- ★ உங்கள் குழந்தை வளரும் போதே உங்கள் சேமிப்பு வளர்வதை உறுதி செய்யுங்கள்.
- ★ மாதாந்தம் சிறு தொகை சேமித்து குறுகிய காலத்தில் பெருநிதி பெறும் திட்டம்.
- ★ உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம்.

இன்றே நாடுங்கள்

| | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| ரூபா | 12% | 14% | 16% |
| 100/= | 1,280.93 | 2,783.41 | 4,643.27 |
| 200/= | 2,561.86 | 5,566.82 | 9,286.54 |
| 300/= | 3,842.79 | 8,350.23 | 13,929.81 |
| 400/= | 5,123.72 | 11,133.64 | 18,573.08 |
| 500/= | 6,404.65 | 13,917.05 | 23,216.35 |
| 600/= | 7,685.58 | 16,700.46 | 27,859.62 |
| 700/= | 8,966.51 | 19,483.87 | 32,502.89 |
| 800/= | 10,247.44 | 22,267.28 | 37,146.16 |
| 900/= | 11,528.37 | 25,050.69 | 41,789.43 |
| 1000/= | 12,809.30 | 27,834.10 | 46,432.70 |

## ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310, 500576.

207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.